விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ரா
ம்
கோ
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 25 புதன்கிழமை (08.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 140

# இலங்கை மாநாட்டுக்கு
# மகாராணி வரார்!

## அரசுக்கு பெரும் ஏமாற்ற செய்தி

(லண்டன்)

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் அவ் அமைப்பின் தலைவியான பிரித்தானிய மகாராணி 2ஆவது எலிசபத் கலந்து கொள்ள மாட்டார் என பக்கிங்ஹாம் மாளிகை அறிவித்துள்ளது.
(20ஆம் பக்கம் பார்க்க)



**அன்பு வாசகர்களே!**

உங்கள் வலம்புரியில் ஜோதிடர் கலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் குருப்பெயர்ச்சி பலன்கள் நாளை முதல் வெளிவரும். வாசிக்கத் தவறாதீர்கள்.

## பயங்கரவாத தடைச்சட்டம் இன்னும் ஏன் அமுலில்?

### பாராளுமன்றில் ரணில் கேள்வி

(கொழும்பு)

இலங்கையின் எதிர்த்தரப்பு அரசியல் குழுக்களை அடக்குவதற்கு அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை பிரயோகிக்கின்றது.

இதனடிப்படையில் அசாத் சாலியும் கைது செய்யப்பட்டுள்ளார். யுத்தம் முடிந்து விட்டது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது. அவ்வாறென்றால் இந்தச் சட்டத்தை அரசாங்கம் ஏன் தொடர்ந்தும் அமுல்படுத்துகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சபையில் கேள்வி எழுப்பினார்.

முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## மர்மமாய் உயிரிழந்த இரு சடலங்கள் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திரு நெல்வேலிப் பகுதியில் மர்மமான முறையில் இறந்து கிடந்த இருவரின் சடலங்கள்பொலிஸாரினால் மீட் கப்பட்டுள்ளது.



இவ் மீட்புச் சம்பவம் நேற்றைய தினம் முற்பகல் வேளை யாழ். திருநெல்வேலிச் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டவர்களில் ஒருவர் கொக்குவில் பிறவுண் வீதியினைச் சேர்ந்த வரும் இரண்டுபிள்ளைகளின்தந்தையாரு மான சிவரட்ணம் ரஞ்சனதாஸ் (வயது 56) என்பவராவார்.

இவர் நகை வியாபாரம் செய்து வருகின்றார். தொழிலின் நிமித்தம் ஒருவாரத்தின் முன்னர் கொழும்பிற்கு சென்று நேற்றையதினம் வீடு திரும்பி வரும்போதே இவர் குறித்த இடத்தில் உயிரிழந்துள்ளார்.

சடலமாக மீட் கப்பட்டமற்றொருவர் திரு நெல்வேலி பலாலி வீதியிணைச் சேர்ந்தவரும் மூன்று பிள்ளைகளின் தந்தை யாருமான அந்தோனி ராஜ் ஜோர்ஜ் (வயது 53) என்பவரே ஆவார்.

இவர் சுகாதார திணைக்களத்தில் அலுவலகப் பணியாளராக பணியாற்றி வருகின்றார் எனவும் திரு நெல்வேலியிலுள்ள மதுபான சாலைக்கு சென்று விட்டுதிரும்புகையிலேயே இவ் இழப்புச் சம்பவம் நிகழ்ந் (20ஆம் பக்கம் பார்க்க)

## அசாத் சாலியின் உயிருக்கு அரசே பொறுப்பு - திஸ்ஸ

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.



இராஜகிரியவில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கு அரசாங்கமே பதில் சொல்ல வேண்டும்.

அசாத் சாலியின் கைதுமூலம் நாட்டில்கருத்துச்சுதந்திரம் மற்றும் அரசியல் செய்ய முடியாத நிலைமை போன்றன இல்லையென்பது வெளிப்படையாக தெரிகின்றது. அரசுக்குள்ளேயே இன்னொரு அரசாங்கம் செயற்படு கின்றது.

நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமே இது ஒரு சட்டத்திற்கு விரோதமான செயல் என தெரிவித்துள்ளார்.

இவ் வாறு நீதியமைச்சர் தெரிவித் துள்ள மையானது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். அரசாங்கத்தில் உள்ள எந்தவொரு முஸ்லிம் அமைச்சர் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு இராணுவ வீரர்கள்; குண்டு வெடிப்பில் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு உடையார் கட்டுக் குளம் காட்டுப்பகுதியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவமொன்றில் ஆறு இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 5 பேர் சிகிச்சைக்காக முல்லைத்தீவு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலை (20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பை தொடர்ந்து பிளவுபடுத்தும் கட்சி அரசியலை கைவிடுங்கள்!

### சம்பந்தனிடம் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதில்லை என்ற தீர்மானத்தை எடுப்பதன் மூலம் கூட்டமைப்பைப் பிளவுபடுத்தும் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் தலைவர் இரா.சம்பந்தன் ஐயா விழுந்துவிடப் போகின்றாரா என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

தமிழர்கள் பெரும் அவலத்துக்குள்ளாகியிருக்கும் இந்த நிலையில் கட்சி அரசியலை கைவிட்டு பொது நலனின் அடிப்படையில் செயற்படுவதற்கு சம்பந்தன் ஐயாவும் தமிழரசுக்கட்சியினரும் முன்வர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்யும் விவகாரத்தில் தற்போது உருவாகியிருக்கும் சர்ச்சைகள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கும்சிவசக்தி ஆனந்தன், கடந்த 12 வருட காலமாக இணைந்து செயற் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-3199)

## வீதி திருத்த தற்காலிக தடை

ஆஸ்பத்திரி வீதியில் கண்டி வீதிக்கும் கோயில் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்த வேலை காரணமாக இன்று புதன்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல் வரை ஆஸ்பத்திரி வீதியின் குறித்த பகுதியானது தற்காலிகமாகத் தடைசெய்யப்படவிருப்பதனால் பொதுமக்களை மாற்றுவழியைப் பயன்படுத்துமாறு யாழ் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வ ரி பற்குணராசா தெரிவித்தார். (ெச)

## வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு

தொ.பே. : 021 321 0815,021 567 1540
E-mail : valampurii@yahoo.com, valampuriijaffna@gmail.com

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ஹாட்லிக் கல்லூரியில் கல்வி பயிலும் செல்வன் இராஜலிங்கம் கீர்த்தனன் அவர்கள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 9A சித்தியடைந்தமையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாராட்டுவோர்:- ஈ.ழ மக்கள் ஜனநாயகக்கட்சி தொழிற்சங்கம், சாலை முகாமையாளர், உத்தியோகத்தர்கள். இலங்கை போக்குவரத்துச் சபை, பருத்தித்துறை.

சி-3259

## தூரிகையின் கேக் ஐசிங் பயிற்சி வகுப்புகள்



11.05.2013
சனி 2.30 மணிக்கு புதிய பிரிவு ஆரம்பமாகின்றது
கலந்து கொள்ள விரும்புவோர் தூரிகையின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்க



தூரிகை
பொன் கந்தையா பாதை,
ம.ம.வி.வீதி, நெல்லியடி

## வேலைவாய்ப்புக்கள்

எமது யாழ்.நகர் மற்றும் நெல்லியடி கிளைகளில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Course Counselor - Female
- Reception Duty Officer - Female
- Instructor for C, C++, Java - Male / Female
- English Language Lecturer (Part time) - Male
- Lecturer for AUTO CAD (Part time) - Male / Female
- Instructor for Tally & QB - Male / Female

விண்ணப்பதாரிகள் சுயவிபரக்கோவையை மின்னஞ்சல் (e-mail) மூலமாக 12-05-2013ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்

ASIAN COMPUTER EDUCATION
e-mail : asianedu@dialogsl.net

## தேவை

மிக்சர் செய்யக் கூடியவர்களும், பக்கிங் செய்யக் கூடியவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.

தொடர்புகளுக்கு:-
077 6042858

(சி-3263)

செல்லா சினிமா யாழ்ப்பாணம்




10.30, 2.30, 6.30, 9.30

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் உள்ள கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு பொறுப்புக்களற்ற கணவன்/மனைவி உடன் தேவை.

தொடர்பு:-
0718676424

(சி-3261)

## தவறிவிட்டது

கலாசாலை வீதி,திருநெல்வேலி எனும் முகவரியினையுடைய தில்லைநாதன் குமணன் (881293250V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய வங்கி ஆவணங்களுடன் மணிப்பர்ஸ், தொலைபேசி (E71) ஆகியன திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டுடெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 5949709

(2558)

# கேள்வி அறிவித்தல்

### பிரதம செயலாளர் செயலகம் வட மாகாணம்

### 2013/14ம் ஆண்டுக்கான சுத்திகரிப்புச் சேவைக்கான விலைமனுக் கோரல்

1)பிரதம செயலாளர் பெறுகைக் குழுவினால் வட மாகாண சபையின் தலைமைக் காரியாலயங்களுக்கு 2013/14ம் ஆண்டுக்கான சுத்திகரிப்புச் சேவை(Cleaning Service) வழங்குவதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2) பெறுகைதாரர் தனிநபராகவோ அல்லது நிறுவனமாகவோ சுத்திகரிப்புச் சேவையை வழங்கும் நிறுவனமாக பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

3) பெறுகைதாரின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் நகரிலிருந்து 10km சுற்றுவட்டத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.

4)ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமிழ் மொழி மூலமான கேள்வி ஆவணங்களை எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பெயரில் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1,000/= ஐ காசாகச் செலுத்தி 08.05.2013 தொடக்கம் 22.05.2013 வரை மு.ப 9.00 தொடக்கம் பி.ப 4.00 வரை அலுவலக நாட்களில் பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - நிதி, வடமாகாணம், 79/2, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

5)கேள்வி ஆவணங்கள் 23.05.2013 திகதி பி.ப 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு "தலைவர், பிரதம செயலாளர் பெறுகைக் குழு,பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம்-நிதி, வடமாகாணம்,79/2, றக்கா வீதி, சுண்டுகுளி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பிரதிப் பிரதம செயலாளர் -நிதி அவர்களின் அறையிலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

6)கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் கேள்வி கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.


**ர.விஜயலட்சுமி**
**தலைவர்,**
**பிரதம செயலாளர் கேள்விச் சபை,**
**187, ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

**07.05.2013**

(c -3257)

# மரண அறிவித்தல்

### நாகமுத்து கதிரவேலு



மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் கட்டுவனை வசிப்பிடமாகவும் தற்போது நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து கதிரவேலு நேற்று (07.05.2013) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து தெய்வானையின் அன்பு மகனும் காலஞ்சென்ற கண்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு,பார்வதி யின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்துப் பிள்ளை,வேலுப்பிள்ளை, சின்னட்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதர ரும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும்

கனகரெட்ணத்தின் (தேவராசா) அன்புத் தந்தையும் புஸ்பதேவியின் மாமனும் சிலோன்மணியின் மைத்துனரும் சுதர்ஷன்-வசந்தி, சுதாகரன்-ராஜகௌரி, தனேஷன்-தீபா, சுகிதரன் -இந்திரோமா ஆகியோரின் அன்புப் பேரனும் அபிஸன், அஸ்னவி, தீபறக்ஷனா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 09.05.2013 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் யாழ்.இந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(596/6) நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.
சுதாகரன் (சுகி சலூன்)

(2560)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### மரமும் மனிதனும்

ராஜா தன் பரிவாரங்களோடு ஒரு காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அருகில் அமைச்சர்கள், அரண்மனை சேவகர்கள் சென்று கொண்டிருந்தார்கள்.

திடீரென்று எங்கிருந்தோ ஒரு கல் "விர்" என்று வந்தது. அக் கல் நேராக ராஜாவின் நெற்றியிலே வந்து பட்டது. உடனே அவர் நெற்றியை பிடித்தவாறு அப்படியே அமர்ந்தார். அருகில் நின்றவர்கள் எல்லோரும் பதறிப் போனார்கள். ஒரு நாட்டின் ராஜா மீது கல் பட்டதென்றால் அது சும்மாவா?

"அக் கல் எங்கிருந்து வந்திருக்குமென எல்லோரும் நாலாபுறமும் ஓடினார்கள். அமைச்சரும் ஒரு பக்கம் ஓடினார்.

அங்கே ஒரு சிறிய பையன் கையில் கல் வைத்திருந்தான்.

அமைச்சர் கோபமாக "இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் அவன் அதிர்ந்து போனான். மெதுவாக... வாயைத் திறந்து "மாங்கா...ய் அடித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

அருகில் பார்த்தார்... ஒரு பெரிய மாமரம்! கீழே இரண்டு மாங்காய் இருந்தன. அவரும் புரிந்து கொண்டார். பையன் மாங்காய் அடிப்பதற்கு வீசிய கல்தான் தவறுதலாக மன்னர் நெற்றியிலே வந்து வீழ்ந்துள்ளது. இருந்தாலும் மன்னர் அல்லவா... சாதாரணமாக விட முடியுமா? பையனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து ராஜா முன் நிறுத்தினார்.

"மன்னா! இவன்தான் கல் வீசியவன்; இவனை சும்மா விடக்கூடாது; தண்டனை வழங்க வேண்டும்" என்றனர் எல்லோரும்.

ராஜா சற்று நேரம் யோசித்து விட்டு, சொன்னார்; "விசாரிக்காமல் தண்டனை வழங்குவது மகா குற்றம்; நாளைக்கு அரண்மனையிலே விசாரணை செய்பலாம்" என்று கூறி விட்டு தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

மறுநாள், அரண்மனை மண்டபத்தில் அனைவரும் கூடினார்கள்.

அந்தச் சிறிய பையனை ராஜா முன் நிறுத்தினர்.

விசாரணை ஆரம்பமாகியது.

"ஏம்பா... நீ அந்தக் காட்டிலே தனியாக என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று ராஜா கேட்டார்.

"மாங்காய் அடித்துக் கொண்டிருந்தேன்" என்று பையன் பதிலளித்தான்.

"எத்தனை மாங்காய் கிடைத்தது" என்றார்.

அவன் "இரண்டு" என்றான்.

"நீ வீசிய கல் மரத்திலே பட்டால், அதற்கு வலிக்குமென்பது உனக்குத் தெரியாதா?" என்றார்.

"தெரியாது" என்கிறான்.

"நீ வீசின கல் மனிதனுக்கு மேலே படுவது உனக்குத் தெரியாதா?"

"தெரியாது" என்றான்.

ராஜா யோசித்து விட்டு, அதன்பின் தீர்ப்பு சொன்னார்.

"உனக்கு தண்டனை கிடையாது! உன்னை விடுதலை செய்கிறேன்! சென்று வா மகனே" என்றார்.

அரண்மனையில் இருந்தவர்களுக்கு ஆச்சரியம்.

"என்ன இது... ராஜா இவ்வாறு கூறி விட்டாரே?" இருந்தாலும் ராஜா தீர்ப்பு கூறியது கூறியது தானே!

எல்லோரும் சென்ற நிலையில் கடைசியாக அமைச்சர் மட்டும் அங்கே நின்று கொண்டிருந்தார்.

"என்ன அமைச்சரே! என்ன யோசனை?" என்று ராஜா கேட்டார்.

அமைச்சர் மெதுவாக "ம்... ஒன்றுமி...ல்லை... இந்தத் தீர்ப்பு..." என்று இழுத்தார்.

ராஜா சிரித்தவாறு, "அமைச்சரே! மரத்திற்கு அறிவு குறைவு. ஆனால், மனிதனுக்கோ ஆறறிவு என்று சொல்கிறார்கள். ஒரு மரம் தன் மேலே கல் எறிந்ததற்கு அச்சிறுவனுக்கு இரண்டு மாங்காயைப் பரிசாக வழங்கியுள்ளது.

ஒரு மனிதன் தன் மேலே கல் எறிந்த ஒரு சிறுவனுக்கு தண்டனை கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களே... இது சரியா?" என்று ராஜா கேட்டார். அமைச்சர் தலை குனிந்தார்.

"அறியாமல் செய்யும் குற்றத்தை மன்னிக்கும் மனோ பாவம் மனிதனுக்கு வேண்டும்" என்பதை வலியுறுத்தவே இக்கதை இங்கே கூறப்பட்டுள்ளது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை தான் இதுவோ?

(இராமநாதபுரம்)

மக்கள் மீள்குடியேற்றப்பட்டு இருவருடங்கள் எட்டவுள்ள நிலையில், புதுக்குடியிருப்பு மக்கள் வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு மக்கள் பல்வேறு சிக்கல்களுக்கும், இன்னல்களுக்கும் முகம்கொடுத்து வரும் நிலையில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின்சார இணைப்புக்களை வழங்கும் திட்டத்தில் கால இழுத்தடிப்பும் பாரபட்ச முறையும் குறித்த ப்குதி மக்களை மேலும் விரக்தியடையச் செய்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சீன அரசின் நிதியுதவியுடன் இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் புதுக்குடியிருப்பு மக்கள் மேற்கொண்டுள்ள போதும் பல குடும்பங்களுக்கு இதுவரையிலும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

வீதிகளில் மின்கம்பங்கள் நிறுவப்பட்டு மின் விநியோகம் இடம்பெறுகின்றபோதும் பல வீடுகள் மின் இணைப்பு செய்யப்படாமையால் இன்னும் இருளிலேயே மூழ்கியுள்ளன. இதேவேளை இம்மின் இணைப்பு வழங்கலில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் ஒரு சிலருக்கே இது வரையிலும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமக்கு மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை என முல்லைத்தீவு மின்சார சபை அலுவலகத்தில்முறையிட்டபோது, இது தொடர்பில் அதிகாரிகள் அலட்சியப் போக்குடன் பதிலளித்துள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் வீதி ஓரங்களில் உள்ள வீடுகளுக்கு மின் இணைப் புக்கள் வழங்கப்படாது எவ்வாறு தொலைவில்உள்ளசில வீடுகளிற்கு மட்டும் வழங்கப்படுகின்றது என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே யுத்தத்தினால் பலவற்றையும் இழந்து அநாதிகளாக வாழும் மக்களை மேலும் துன்பப்படுத்தாது தற்போது மின்சாரம் எவ்வாறு ஒரு சிலருக்கு வழங்கப்பட்டதோ அதே போல அனைவருக்கும் மின் இணைப்பு செய்ய வேண்டும் எனவும் மின் இணைப்பிற்கான வீண் கால தாமதங்களைத் தவிர்க்குமாறும் அரசினால் மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் உரிய முறையில் மக்களை சென்றடைவதை உரிய அதிகாரிகள் கண்காணித்து மக்கள் பயனடைய வழி வகுக்க வேண்டுமெனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-5-269)

# கலை, கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஊரெழு கலை, கலாசார மன்றம் நடத்தும் கலை, கலாசார விழா எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி கற்பக விநாயகர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

முன்னாள் அதிபர் க.ஆனந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன், உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் அ.அருணந்தி சிவம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். ஆசியுரையை உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.மு.சோமசுந்தரக் குருக்கள் வழங்கவுள்ளார். (அ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 90 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 80-140 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 80 | 60 |
| தக்காளி | 100 | 100 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 50 |
| கோவா | 70 | 80 | 80 | 80 |
| கரட் | 80 | 70 | 120 | 120 |
| பூசணி | 25 | 30 | 40 | 50 |
| புடோல் | 60 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 20 | 30 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 120-130 | 120-160 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 90 | 80 |
| பாகற்காய் | 60 | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | -- | -- |
| பயற்றங்காய் | 40 | 50 | 40 | 40 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 60 | 40-50 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 600 | 400 |
| போஞ்சி | 120 | 80 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 70 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | -- |
| தேசிக்காய் | 140 | 50 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 50 | 40-45 |
| [illegible] | 100 | 90 | 100 | 100 |

## இராசி பலன்

08.05.2013
(சித்திரை 25, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 5.06 மணிவரை
அச்சுவினி முழுவதும்
இராகுகாலம் 11.55 -1.25 மணிவரை
சுபநேரம் 4.25-5.55 மணிவரை
போதாயண அமாவாசை

**மேடம்** செய்தொழிலில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியுண்டு.

**இடபம்** காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சேமிப்பில் சிறிது கரையலாம், வேலைச்சுமை கூடும், பிதா சிந்தனையுண்டு, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்** மற்றவர்களின் பாராட்டும் வகையிலான செயலொன்றை செய்து காட்டுவீர்கள், எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் கைகூடும், பொருளாதார ரீதியில் வளர்ச்சி காண்பீர்கள்.

**கடகம்** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், வாழ்க்கைத்தரம் உயர வழி வகை செய்வீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும் விதத்தில் அமையும், ஆரோக்கியமான நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கடனில் ஒரு பகுதியை கொடுத்து தீர்க்கும் எண்ணம் உருவாகும், வீட்டை அழகு படுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் விலகுவர்.

**கன்னி** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மறதியால் தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் அவசியம், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**துலாம்** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும், அபூர்வ சந்திப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்ட படியே செய்து முடிப்பீர்கள், புதிய பொருள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், பொதுத் தொண்டுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு, தாழ்ந்த சுபவமுண்டு.

**மகரம்** பெற்றோர்களின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், அதிர்ஷ்டகரமான நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும்.

**கும்பம்** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டும் நாள், பாகப்பிரி வினைகள் சுமுகமாக முடியும், அந்நியர் சந்திப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு

**மீனம்** பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், குடும்பக் கவலையுண்டு, வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிபெருக்கி சத்தத்தால் மக்கள் பெரும் அசௌகரியம்


(தும்பளை)

சமரபாகு, பொலிகண்டி, கொற்றாவத்தை, நவிண்டில் ஆகிய பகுதிகளில் நடைபெறும் பணவரவு நிகழ்வுகளின் போது ஒலிபெருக்கிகளின் சத்தம் அதிகமாக காணப்படுவதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது பணவரவு நிகழ்வுகளுக்குரிய காலமாதலால் மேற்குறித்த இடங்களில் பணவரவு நிகழ்வுகள் நடைபெறுகின்ற போது இரு வேளைகளிலும் ஒலிபெருக்கியின் சத்தம் அதிகமாக உள்ளதால் பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக பரீட்சைக்கு தம்மை தயார்படுத்தும் மாணவர்கள் மற்றும் வயோதிபர்கள், ஏனையோர் தம் செயற்பாடுகளில் பெரும் இடர்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே பொது நலனை கருத்திற் கொண்டு ஒலிபெருக்கி சத்தங்களை குறைத்து வைத்து சடங்குகளை நடந்த உரிய தரப்பினர் ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-19)



நன்றி:ஐலன்ட்

# பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மகாலிங்கம் அரங்கில் அதிபர் எஸ். பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள உதவிக்கல்விப் பணிப்பாளர்(ஆங்கிலம்) ந.சோமஸ்கந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஓய்வு நிலை ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-29)

# இந்தியா 26 அபிவிருத்தி திட்டங்களை மேலும் நடைமுறைப்படுத்தவுள்ளது

## இந்திய தூதுவர் அசோக் கே.காந்தா

(யாழ்ப்பாணம்)

**வடபகுதி மக்களிடையே புரிந்துணர்வைக் கட்டி எழுப்புவதற்கு அரசாங்கம் முன்னேற்றகரமான செயற்பாடுகளை மேற்கொள்வது அவசியம் என இலங்கைக்கான முன்னாள் இந்திய தூதுவர் அசோக் கே.காந்தா தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன் தினம் வருகை தந்து தனது பிரியாவிடை நிகழ்வை யாழ்.ரில்கோ சிற்றி ஹோட்டலில் நடத்தியிருந்தார். இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்திற்குப் பின்னர் இலங்கை-இந்திய அரசாங்கத்தின் நட்புறவை வலுப்படுத்தும் வகையில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதற்கும் இலங்கை மக்களின் பிரச்சினைகளையும் சமாதானமான சூழலையும் உருவாக்கும் வகையிலும் என்னால் முடிந்தவரை எனது நாட்டிற்கும் இலங்கை நாட்டு மக்களுக்கும் உதவிகளை மேற்கொண்டுள்ளேன்.

அத்துடன் இந்தியத் தூதுவராக நான் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொள்ளும் இறுதிப் பயணமாக இது இருந்தாலும் நான் டில்லியில் வேறு பதவியில் அமர்ந்தாலும் இலங்கையின் வடபகுதி மக்களின் அபிவிருத்தி, மீள் குடியேற்றம் தொடர்பான விடயங்களில் அக் கறை செலுத்துவேன்.

இலங்கையில் இருந்து நான் பிரிந்து சென்றாலும் யாழ்ப்பாணத்தின் பசுமையான நினைவுகளை மறக்க முடியாது. இந்த நாட்டில் உள்ள அனைத்து இன மக்களும் ஒற்றுமையையும் சமாதானத்தையும் உணர்த்தும் வகையில் இன,மத வேறுபாடின்றி வாழ வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம், புனர்நிர்மாணம் போன்ற செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வடபகுதி மக்கள் சமாதானத்துடனும் புரிந்துணர்வுடனும் வாழ வேண்டுமென்ற வகையில் அதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் இந்திய அரசாங்கத்தின் உதவிகள் எப்போதும் இலங்கையின் வடபகுதி மக்க ளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் வலியுறுத்தப்படும்.

மேலும் கடந்த 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியா இலங்கையில் 36 அபி விருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. அத்தோடு மேலும் 26 அபிவிருத்தித் திட்டங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்தவுள்ளது.

மேலும் இந்திய வீட்டுத்திட்டம், விவசாயிக்கான உழவு இயந்திரம் வழங்கல், துவிச்சக்கரவண்டி வழங்கல் போன்ற பல்வேறு மக்கள் வாழ்வாதாரத் திட்டங்களுடன் வடக்குக்கான புகையிரதப் பாதை புனர்நிர்மாணப் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் எதிர்வரும் 14 ஆம் திகதி வடக்கிற்கான புகையிரதச் சேவை மதவாச்சியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதுடன் அடுத்த வருடம் மார்ச் மாதம் யாழ்தேவி புகையிரத சேவை யாழ்ப்பாணம் வரையும் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வரையும் இடம்பெறும். இந்த புகையிரதச் சேவை ஆரம்பிக்கப்பட்டால் இதன் மூலம் வடக்கின் பொருளாதாரம் மேம்பாடடையும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கைக்குத் தேவையான உதவிகளை வழங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். நாங்கள் இங்கு முன்னெடுத்த முயற்சிகளுக்கு அரசாங்கமும் மக்களும் போதியளவு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். அனைவருக்கும் எமது நன்றிகள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




# சிறப்பு உற்சவங்கள்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் வைகாசி மாதத்திற்கான சிறப்பு உற்சவங்கள் பற்றிய விபரங்கள் நிர்வாக சபையினரால் அனுப்பி வைக்கப்பட்டன.

இதனடிப்படையில் நாளை வியாழக் கிழமை சித்திரைப் பரணி பூசையும் 15 ஆம் திகதி புதன்கிழமை வைகாசி,மாத சங்கிராந்தி தீர்த்தமும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைகாசி விசாகமும் சங்காபிஷேகமும் பூரணைத் திருவிழாவும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை திருஞானசம்பந்தர் குருபூசையும் நடைபெறவுள்ளன. (அ)

# ஆலோசனை கூட்டம்

(சாவகச்சேரி)

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய பெருந்திருவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பெருந்திருவிழாவுக்கான குடிநீர் விநியோகம்,சுகாதாரம், பாதுகாப்பு போக்குவரத்து போன்ற சேவைகளை வழங்கவிருக்கும் திணைக்களத் தலைவர்களைத் தவறாது கலந்து கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# மலசலகூட குழியில் எலும்புக்கூடு மீட்பு

(யாழ்ப்பாணம்)

கைவிடப்பட்ட மலசலகூட குழியில் இருந்து இனம் தெரியாத நபர் ஒருவரின் எலும்புக் கூடு மீட்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாதகல் கிழக்கு ஜே/152கிராம அலுவலர் பிரிவிலிருந்தே இந்த எலும்பு கூடு மீட்கப்பட்டுள்ளது.

மாதகல் பகுதியில் உள்ள உதயதாரகை சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் உள்ள தூர்ந்து போன நிலையில் காணப்பட்ட மலசலகூடக் குழியை துப்புரவு செய்யும் நடவடிக்கையை வீட்டு உரிமையாளர்கள் நேற்று முன்தினம் மாலை மேற்கொண்டனர்.

இதன்போது மண்டையோடு, வாயின் பற்கள் உள்ளடக்கிய தாடைப் பகுதி, காலின் தொடை எலும்பு என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இளவாலைப் பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பில் உடனடியாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பாதிகாரி சிந்திக்க என். பண்டாரா தலைமையிலான குழுவினர் அந்த குழியிலிருந்து எலும்புக் கூடொன்றை மீட்டனர்.

இதேவேளை மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிபதி பி.ஜே. தம்பித்துரை, சட்ட வைத்தியதிகாரியுடன் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று பார்வையிட்டு எலும்புக்கூட்டை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார். (அ-4-6)

# வல்லிபுர குறிச்சியில் வாள்வெட்டு சம்பவம்

## இருவர் படுகாயம்; ஒருவர் கைது

(கரவெட்டி)

வடமராட்சி வல்லிபுரக் குறிச்சியில் இடம் பெற்ற கோர வாள் வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துபருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சந்தேகநபர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வல்லிபுரக் குறிச்சி தாமரைக் குளத்தடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,இரு தரப்பினருக்கிடையில் நீண்டகாலமாக பகைமை இருந்து வந்துள்ளதாகவும் நேற்று முன்தினம் திட்கட்கிழமை ஒரு தரப்பை சேர்ந்த சிறுவனை மறு தரப்பை சேர்ந்த இளைஞர் ஒருவர் தாக்கியதில் ஏற்பட்ட முரண்பாடே இச்சம்பவத்திற்கு காரணம் எனவும் தெரிய வருகின்றது.

நேற்று அதிகாலை ஒரு தரப்பைச் சேர்ந்த நபர் தொழில் நிமித்தம் சென்று கொண்டிருந்த வேளை வல்லிப்புரக்குறிச்சி தாமரைக் குளத்தடிப் பகுதியில் மறைந்திருந்த நான்கு பேர் அந்த நபர் மீது கடுமையான வாள் வீச்சை மேற்கொண்டதாக தெரியவருகிறது.

இச்சம்பவத்தில் வல்லிபுரக் குறிச்சி சிங்கர் நகர்ப் பகுதியைச் சேர்ந்த துரைராஜா சத்தியமோகன் (வயது-34) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

இவர் பதில் தாக்குதலை மேற்கொண்டதில் புலோலி தெற்கைச் சேர்ந்த செல்வராசா ரமணன் (வயது-27) என்ற குடும்பஸ்தரும் பலத்த வாள்வெட்டுக்கு இலக்கானார். சம்பவத்தில் காயமடைந்த இரு நபர்களும் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர் ஒருவரை பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் இரு முக்கிய சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளனரென தெரிவிக்கப் படுகின்றது.

இச்சம்பவத்தால் நேற்றைய தினம் வல்லிபுர குறிச்சி பகுதியில் பெரும் பதற்ற நிலை காணப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (அ-3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதி தடையில் சிக்குமா இலங்கை?

(கொழும்பு)

**ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதித் தடையில் இருந்து தப்பிக் கொள்வதற்காக பல்வேறு வாக்குறுதிகளை வழங்க இலங்கை முன்வந்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அனைத்துலக மீன்பிடிச் சட்டங்களுக்கு முரணான வகையில் இலங்கை மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதால் இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மீன் ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

அடுத்த மாதம் ஐரோப்பிய நாடாளுமன்றக் கூட்டத்தில் இலங்கை மீது மீன் ஏற்றுமதித் தடைகளை விதிப்பது குறித்து முடிபு செய்யப்படவுள்ளது.

ஏற்கனவே அனைத்துலக சட்டங்களை மீறி மீன்பிடித்தலில் ஈடுபடுவது தொடர்பான குற்றச்சாட்டில் இலங்கைக்கு மஞ்சள் அட்டை எச்சரிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் விடுத்திருந்த நிலையில் இம்முறை ஏற்றுமதி தடை விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 5 வீதமாக உள்ள மீன் ஏற்றுமதி கடுமையாகப் பாதிக்கப்படும் என்று கருதப்படுகின்றது.

இது இலங்கை அரசாங்கத்துக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள நிலையில் அனைத்துலக சட்டதிட்டங்களுக்கு அமைவாக மீன்பிடித்தலை மேற்கொள்வது குறித்து பல்வேறு வாக்குறுதிகளை வழங்க இலங்கை முன்வந்துள்ளதாக அறியப்படுகின்றது.

இதன் பிரகாரம் அனைத்துலக சட்ட நடைமுறைகளை மீறும் மீனவர்களுக்கு 15 இலட்சம் ரூபா அபராதம் விதிப்பது, மீன் வளங்களைப் பாதுகாப்பது, உள்ளூர் மீன்பிடிக் கலங்களைக் கண்காணிக்கும் பொறிமுறையை உருவாக்குவது உள்ளிட்டவற்றை நடைமுறைப்படுத்துவது குறித்த வாக்குறுதிகளை இலங்கை வழங்கியுள்ளது.

இலங்கையின் கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையிலான குழு ஐரோப்பிய ஒன்றியத்திடம் இந்த வாக்குறுதிகளை வழங்கியுள்ளதாக தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கையிலிருந்து மீன் இறக்குமதி செய்யும் பிரதான நாடுகளான பிரித்தானியா, இத்தாலி, நெதர்லாந்து, பிரான்ஸ், ஜப்பான், அமெரிக்கா ஆகியவற்றில் முக்கியமான நான்கு நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புத்தாண்டு விழா

(புன்னாலைக்கட்டுவன்)

யா/ புத்தூர் இந்து ஆரம்ப ஆலய பாடசாலையின் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்ச்சிகள் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் இ.கோகுலராகவன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்தோடு மாணவர்களுக்குரிய கயிறு இழுத்தல் போட்டியும் இடம்பெறவுள்ளதோடு பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறும். (அ-7-78)

# மின்சாரம் தாக்கியதில் ஊழியர் படுகாயம்

(மிருசுவில்)

மரங்கள் வெட்டிக் கொண்டிருந்த வேளை மின்சாரம் தாக்கியதில் மின்கம்பியில் தொங்கி கீழே விழுந்த மின்சார சபை ஊழியர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மல்லாகம் கல்லாறு பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவது, மின்சார சபை ஊழியர் ஒருவர் மின்சார இணைப்பைத் துண்டிக்காது மின்சார தூணில் இருந்த கொடி மற்றும் மரங்களில் ஒருபகுதி வெட்டி அகற்றிக் கொண்டிருந்த வேளை மின்சாரம் தாக்கியதில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் விசுவமடு காளிபுரம் பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை செந்தூரன் (வயது 19) என்ற மின்சார சபை ஊழியரே மின்சாரம் தாக்கி படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அவசரசிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-3-85)

# வெள்ளவத்தையில் கோரவிபத்து!

# இருவர் பலி; ஒருவர் கவலைக்கிடம்

மதுபோதையில் காரை செலுத்தி வந்த சாரதியின் காரில் மோதுண்டு மைத்துனிமார் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒரு சிறுவன் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வெள்ளவத்தை களுபோவில வீதியில் இடம்பெற்ற இக்கோர விபத்தில் ஜனனிஜீவன் (வயது 16), இவரின் மைத்துனியான பாலசூரியன் வாரணி (வயது 29) ஆகிய இருவர் உயிரிழந்தனர். ஜீவன் ஜனன் (வயது 13 ) என்ற சிறுவன் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுவிஸில் இருந்து விடுமுறையில் இலங்கைக்கு வந்த புங்குடுதீவைச் சேர்ந்த ஜீவனின் குடும்பத்தினர் விடுமுறையை கழித்து விட்டு மீண்டும் சுவிஸிற்கு திரும்பிச் செல்லவிருந்தனர். சம்பவ தினத்தன்று வெள்ளவத்தைப் பகுதியில் தமது உறவினரான பாலசூரியன் வாரணி (மைத்துனி) என்பவருடன் கொழும்பிற்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் வெள்ளவத்தை பகுதியில் களுபோவில வீதியின் பாதசாரிகளுக் கான மஞ்சள் கடவையைக் கடக்க முற்பட்ட வேளையில் மது போதையில் காரை ஓட்டி வந்த சாரதி பிரஸ்தாப நபர்களின் மீது வேகமாக காரை மோதியுள்ளார்.

இக்கோரவிபத்தில் பாலசூரியன் வாரணி 10 மீற்றர் தூரத்திற்கு தூக்கியெறியப்பட்டு, சம்பவ இடத்திலே பலியானார். தொடர்ந்து படுகாமடைந்த நிலையில் ஜனனி, ஜனன் ஆகியோர் கொழும்பு வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட நிலையில் ஜனனி நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது சகோதரன் ஜனன் தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், காரை ஓட்டி வந்த சாரதி மது போதையில் இருந்தமையே குறித்த விபத்து ஏற்படக் காரணம் என தெரிவித்தனர். (அ-செ-5-17)


## யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்

## 01.06.2013 தொடக்கம் 30.05.2014 வரை

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் இயங்கும் சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் 01.06.2013 தொடக்கம் 30.05.2014 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

இதற்குரிய கேள்வி விண்ணப்பப்படிவத்தினையும் அதற்குரிய நிபந்தனைகளையும் அலுவலக நேரங்களில் வைத்தியசாலை அலுவலகத்தில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்வதோடு சிற்றுண்டிச் சாலைக்கு மாதமொன்றுக்கு வாடகையாக வழங்கக்கூடிய ஆகக் கூடிய தொகையை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுவதோடு கேள்வி விண்ணப்பங்களை 17.05.2013 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பணிப்பாளர், போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல்வேண்டும். அல்லது நேரடியாக வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம்.

விண்ணப்பப்படிவத்தினை மீளளிக்கப்படாத தொகையான ரூபா 500 ஐ அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மீளளிக்கக்கூடிய தொகையான ரூபா 5000 ஐ அலுவலகத்தில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்ப படிவத்துடன் இணைக்கவேண்டும்.

விண்ணப்ப கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி விண்ணப்பம் எனதவறாது குறிப்பிடப்படுதல்வேண்டும்.

கேள்விகள் 17.05.2013 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி பிரசன்னமாக இருக்கலாம்.

*பணிப்பாளர் (தலைவர்)*
*பிராந்திய பெறுகைகள் குழு,*
*போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*

(சி-3254)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1971 இந்து (K)<br>நட்சத்திரம்:உத்தரம் 1<br>உயரம் : 6'<br>கி.பா:- 26.25<br>தகைமை/தொழில்: இலத்திரனியல் பொருளியலாளர்<br>தொ.இ: B -1798 | பிறப்பு: 1987 இந்து (V)<br>நட்சத்திரம்:பூரம் 3<br>உயரம்:5'7"<br>கி.பா: 27.25<br>தகைமை/தொழில்: A/L ஆசிரியை<br>தொ.இ: G -1794 |
| பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>தகைமை/ தொழில்: A/L, Canada Citizen<br>தொ.இ: B -1790 | பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்:அனுசம் 3<br>உயரம் : 5'<br>கி.பா: 32.5<br>தகைமை/ தொழில்:முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G-1795 |
| பிறப்பு: 1982 RC குருகுலம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/ தொழில்: B.Sc, M.Sc (Eng.civil)<br>தொ.இ: B -1792 | பிறப்பு: 1985 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>உயரம்: 5'2"<br>கி.பா: 53<br>தகைமை/ தொழில்: BSc தனியார் துறை<br>தொ.இ: G -1796 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>உயரம்: 5'7"<br>கி.பா:55.5, 8இல் சூரி, செவ்<br>தகைமை/தொழில்: MBBS Dr<br>தொ.இ: B -1797 | பிறப்பு: 1974 இந்து (K)<br>நட்சத்திரம்:பூரட்டாதி 3<br>உயரம்: 5'6"<br>கி.பா:35.75,2 இல் சூரி, செவ்<br>தகைமை/ தொழில்: BA,MA ஆசிரியை<br>தொ.இ: G -1799 |

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டிபோட்டு ஓடியதால் வாகனவிபத்து; அறுவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளத்தில் இருந்து வவுனியா நகர் நோக்கி வந்த தனியார் பேருந்தும் அதே பகுதியில் இருந்து வந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தும் போட்டிபோட்டு பயணிகளை ஏற்றுவதற்கு மிக வேகமாக சென்றமையால் இந்த விபத்து ஏற்பட்டது.

வவுனியா-மன்னார் வீதி நான்காம் கட்டையில் நேற்றுக்காலை ஏற்பட்ட விபத்தில் ஆறு பயனிகள் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது;

செட்டிகுளத்தில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு வவுனியா நோக்கி வந்த இரு பேருந்துகளும் ஏட்டிக்குப் போட்டியாக ஓடியமையால் விபத்து ஏற்பட்டுள்ளது.

முன்னால் சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து சடுதியாக வேகக்கட்டுப்பாட்டை இழந்து மன்னார் வீதி நான்காம் கட்டைப் பகுதியில் மரத்துடன் மோதியது.

இதனால் இதில் பயணம் செய்த ஆறு பயனிகள் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

வவுனியா பொலிஸார், சாரதிகள் இருவரையும் கைது செய்து விசாரணைக்காக தடுத்து வைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா தனியார் பேருந்து சங்கத்தலைவர் என்.இராஜேஸ்வரனை வினவியபோது, கடந்த காலங்களில் இருந்த அரசாங்க அதிபர் தனியார் பேருந்து சங்கத்தையும் இலங்கை போக்குவரத்து சபையையும் அழைத்து உள்ளூர் சேவைக்கான நேர அட்டவணையைத் தீர்மானிப்பார். இதனால் இரண்டு பேருந்துகளும் வேறு வேறு நேரங்களில் பயணித்தன.

ஆனால் தற்போதைய அரசாங்க அதிபர் அவ்வாறு செய்யவில்லை. இது விடயம் தொடர்பாக தெரிவித்தும் நேர ஒழுங்கு இன்னும் ஒழுங்கமைக்கப்படவில்லை. இதனால் இரு பேருந்துகளும் ஒரே நேரத்தில் தமது பயணத்தை ஆரம்பித்ததால் போட்டி ஏற்பட்டு விபத்து ஏற்பட்டது என்றார். (அ-2-250)

# வழக்கு விசாரணைக்காக நீதிமன்றுக்கு வந்தார் துமிந்த

(கொழும்பு)

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட மூவரின் படுகொலை தொடர்பான வழங்கின் 11ஆவது சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நேற்று முன்தினம் முதன் முறையாக நீதிமன்றில் ஆஜராகியுள்ளார்.

மேற்படி சம்பவத்தின் பின்னர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் மீண்டும் நேற்று முன் தினம் கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் ஆஜரானார்.

பிணையில் விடுவிக்கப்பட்டதன் பின்னர் தமது கட்சிக்காரரான துமிந்த சில்வா மருத்துவமனையில் இருந்து வெளியேறிச் சென்றுள்ளமை தொடர்பாக பலர் கருத்துத் தெரிவித்துள்ளதுடன் அதன் காரணமாக தமது கட்சிக்காரருக்கு நியாயமான தீர்ப்பொன்று கிடைப்பதற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுல சூரிய நீதிமன்றிடம் கேட்டுக்கொண்டார்.

மேலும் இவ்வாறான செயற்பாடுகள் நீதிமன்றை அவமதிப்பதாக அமைவதாகவும் அவர் மேலும் கூறினார்.

அதன் பின்னர் நீதவான் லியனகே வழக்கை இன்று 1.30 மணிவரை ஒத்தி வைத்துடன் அன்றைய தினத்தில் நீதிமன்றில் ஆஜராகுமாறும் சந்தேக நபரான துமிந்த சில்வாவிற்கு உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# மின்சார கட்டண உயர்வுக்காக ஒஸ்கார் விருது வழங்கப்பட வேண்டும்

## கயந்த எம்.பி.கிண்டல்

(கொழும்பு)

மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பான நாடகத்திற்காக அரசாங்கத்திற்கு ஒஸ்கார் விருது வழங்கப்படவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

மேதினத்திற்கு முன்னதாக பாரியளவு மின்சாரக் கட்டண அதிகரிப்பை அறிவித்து அதன் பின்னர் மேதினம் அன்று மின் சாரக் கட்டணங்களை குறைப்பதாக அரசாங்கம் அறிவித்தது என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணா திலக்க சுட்டிக் காட்டினார்.

பொருளாதார பின்னடைவுகளை மூடி மறைக்கும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறான நாடகங்களை நடத்தி வருவதாகவும் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசாங்கம் மின்சாரக் கட்டண நாடகத்தின் ஊடாக பொழுது போக்கு வழிகளை ஏற்படுத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்துள்ளதாகவும் வரி வருமானத்தையே அரசாங்கம் பிரதானமாக நம்பியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# கச்சதீவு மீளப் பெறும் வரை மீனவர்களின் பிரச்சினை தீராது

## டி.ராஜா தெரிவிப்பு

கச்சதீவு மீளப் பெறும் வரை மீனவர்களின் பிரச்சினை தீர்க்கப்படமாட்டாது. எனவே மத்திய அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என டி.ராஜா தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல்லில் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில், இந்திய கம்யூனியஸ் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா மேற்படி தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் தீர்மானம் முதலமைச்சரின் கடிதம் ஆகியவற்றை மத்திய அரசு பொருட்படுத்தவில்லை என்று குற்றம் சுமத்தியதுடன்,

இலங்கை தமிழர்களை மத்திய அரசு கைவிட்டு விட்டதாகவும் இலங்கையில் பொது நலவாய மாநாடு நடத்தப்படக்கூடாது என்று கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் தெரிவிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய அமைச்சர் ஜி.கே.வாசனும் இந்த மாநாடு இடம்பெறக்கூடாது என்று கூறுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் டி.ராஜா தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்திய மத்திய அரசு எந்த கருத்தும் வெளியிடாத நிலையில் இலங்கை அரசாங்கத்திற்கு பாதகம் இல்லாது இந்தியா செயற்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# புனரமைக்கப்பட்ட வீதியை மீண்டும் புனரமைத்து தருக

(சிவநகர்)

கரைச்சிப் பிரதேச சபைக்குச் சொந்தமான உருத்திரபுர மயானத்திற்கு அருகில் உள்ள பாலத்தை புனரமைத்துத் தரும்படி அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னர் துயிலும் இல்லமாக இயங்கி வந்த இடத்தில் இருந்து உருத்திரபுரம் மயானத்திற்கு அருகாகச் செல்லும் வீதி முன்னர் புனரமைக்கப்பட்ட போதிலும் தற்பொழுது மக்களால் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

இவ் வீதியில் புதிதாக பாலம் ஒன்று அமைக்கப்பட்ட போதிலும் பாலம் பழுதடைந்துள்ளது. பாலம் விசாலமாக இல்லாமையால் மழை காலத்திலும் பருவம் தவறிப் பெய்யும் மழையின் போதும் இவ் வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதன் நிமிர்த்தம் வீதியால் பயணிக்கும் மக்கள் அதன் அயலில் உள்ள தனியார் காணிகளினூடாகவே பயணிக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்திற்குச் செல்வதற்கு இவ் வீதியே பிரதான பாதையாக விளங்குகின்றது.

எனவே, இதனை உரிய தரப்பினர் கவனத்தில் கொண்டு இவ்வீதி, பாலம் என்பவற்றை புனரமைத்துத் தரும்படி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)

# ஹஜ் யாத்திரை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

ஹஜ் யாத்திரை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று சவுதி அரேபியாவில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த குறித்த ஒப்பந்தத்தில் ஹஜ் விவகாரங்களுக்கான சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி மற்றும் சவுதி அரேபிய ஹஜ் விவகார அமைச்சர் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

சவுதி அரேபியாவிலுள்ள புனித நகரங்களான மக்கா, மதீனா ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக இலங்கையிலிருந்து 2 ஆயிரத்து 800 யாத்திரிகர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

இதன்படி இலங்கையிலிருந்து 2 ஆயிரத்து 800 பேர் மாத்திரமே இவ் வருடம் ஹஜ் யாத்திரையை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 800 பேர் மாத்திரமே இலங்கையிலிருந்து ஹஜ் யாத்திரை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)



தொழிற்சங்க ஒருங்கிணைப்பிற்கான ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிரான போராட்டமொன்று நேற்றுமுன்தினம் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அரசியல்வாதிகள், தொழில் சங்கவாதிகள் என பலர் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்

# விவசாயிகளுக்கு பயிற்சி நெறி

(றெட்பானா)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள முல்லை. மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தால் அம் மாவட்ட விவசாயிகளுக்கு கிராம ரீதியாக கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் 3 நாட்களைக் கொண்ட பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் நேற்று செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள வள்ளுவர் புரம் தேராவில் கிராம சேவகர் பிரிவுகளின் விவசாயிகளுக்கான இரண்டாம் நாள் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றன.

இப் பயிற்சி வகுப்புக்கள் முல்லை. மாவட்டத்தில் உள்ள விவசாய போதனாசிரியர்களைக் கொண்டு ஒளிப் பட விளக்கங்களுடன் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன.

இதில் விவசாயிகள் அனைவரும் பயன் பெறும் வகையில் இப் பயிற்சி வகுப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் பயிற்சியின் நிறைவில் விவசாயிகள் பலரும் அவர்களது குறைகள் தீர்க்கப்படுவதற்காக சென்றமை பயன் அவதானிக்க முடிந்தது. (அ-3-280)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திருமணம் ஆகியும் பிரம்மச்சாரி; திருமணம் ஆகாமலே சம்சாரி!

## –7 ஆம் வீடு சொல்வதென்ன?



புராணம் சம்பந்தமான செவி வழிக் கதை ஒன்று உண்டு. நாரதர் தன்னுடைய விஷ்ணு பக்தி பற்றி உயர்வான எண்ணம் உடையவர். தன்னளவுக்கு விஷ்ணு பக்தி கொண்டவர் எவருமில்லை என்ற எண்ணம் கொண்டிருந்தார்.

இந்நிலையில் ஒரு சாதாரண விவசாயி தன்னுடைய எல்லா வேலைகளையும் முடித்துவிட்டுப் படுக்கப் போகும்போது கோவிந்தா, நாராயணா என்று சொல்லிவிட்டுப் படுத்தார். நாரதர் விஷ்ணுவிடம் இந்த விவசாயி ஒரு நாளில் ஓரிரு முறை மட்டும்தான் தங்கள் நாமத்தை உச்சரிக்கிறான் என்றார். எனினும் அவன் என்னுடைய பிரியமான பக்தன் என்றார் விஷ்ணு. நாரதருக்கு கோபம் வந்து விட்டது.

உடனே விஷ்ணுவானவர் நாரதரிடம் ஒரு கிண்ணம் நிறைய எண்ணெயைக் கொடுத்து அதனை சிந்தாமல் சிதறாமல் உலகை ஒரு முறை சுற்றி வா என கூறினார். அவ்விதமே நாரதரும் முனைப்பாக அந்த செயலைச் செய்து முடித்தார். அவரிடம் விஷ்ணு இன்று எத்தனை முறை என் நாமம் கூறினாய்? என்று கேட்க நாரதர் திடுக்கிட்டார். அவர் கருமமே கண்ணாக இருந்ததால் ஒருமுறை கூட விஷ்ணு நாமம் ஜெபிக்கவில்லை. சிரித்த விஷ்ணு அதனால்தான் அந்த விவசாயியை என் சிறந்த பக்தன் எனக் கூறினேன். அவன் தன் குடும்பத்துக்காக நாள் முழுவதும் உழைத்துவிட்டு களைப்புடன் ஒருமுறை என் நாமத்தைக் கூறினானே அதுவே போதும் என்றார்.

இதிலிருந்து விஷ்ணுவே இல்லறவாசிகளின் கஷ்டம் தெரிந்து இல்லறத்திற்கு எத்தனை முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் என்று பாருங்கள்.

எனவே ஒரு மனிதனுக்கு மனைவி, மக்கள், குடும்பம் என்பது எத்தனை அவசியமானது என்று தெரிகிறது. இனி ஒருவருக்கு இல்லறம் எனும் நல்லறம் ஏற்பட தேவையான ஜாதக அமைப்புக்களைப் பார்ப்போம்.

### ஒருவர் ஜாதகத்தின் 7 ஆம் இடமே

அவரின் இல்லறத்தை பற்றி குறிக்கிறது. 7 ஆம் பாவம், லக்ன பாவ சம்பந்தம் கண்டிப்பாக இருக்க வேண்டும். அடுத்தபடியாக இராசி. இராசிக்கு 7 ஆம் பாவ சம்பந்தம் வேண்டும். இதில் இரண்டில் ஒரு சம்பந்தம் கண்டிப்பாக அவசியம். லக்னாதிபதி 7 ஆம் அதிபதி சம்பந்தம் லக்னாதிபதி 7 ஆம் வீட்டில் இருப்பது. 7 ஆம் அதிபதி லக்னத்தில் இருப்பது. லக்னாதிபதி 7 ஆம் அதிபதி சாரத்தில் இருப்பது. 7 ஆம் அதிபதி லக்னா திபதி சாரத்தில் இருப்பது. லக்னாதிபதி 7 ஆம் அதிபதி பரிவர்த்தனை, பார்வை, சேர்க்கை சம்பந்தம்.

இதுபோல இராசி அதிபதியும் இராசிக்கு7 ஆம் அதிபதியும் சம்பந்தம் பெற்றிருந்தாலும் ஒருவருக்கு திருமண வாழ்வு கைகூடும். லக்னாதிபதியும் 7 ஆம் அதிபதியும் 6/8 எனும் சஷ்டாஷ்டகத்தில் இருப்பின் கணவன்- மனைவி எப்போதும் சண்டையிட்டுக் கொண்டே இருப்பர்.

7 ஆம் அதிபதி ஆட்சி, உச்சம், நட்புடன் இருந்தால் ஜாதகரின் மண வாழ்க்கை இனிதாக இருக்கும்.

### விருப்பத் திருமணம்

சனி, செவ்வாய் சம்பந்தம் விருப்பத் திருமணம் அல்லது கலப்புத் திருமணத்தைத் தரும். இதற்குக் காரணம் கால புருஷ தத்துவப்படி செவ்வாய் லக்ன முதலாம் அதிபதி. அவர் சர இராசி. சர இராசிக்கு 11 ஆம் இடம் பாதகஸ்தானம். எனவே, லக்னாதிபதியும் மாங்கல்ய ஸ்தானாதி பதியுமாகிய செவ்வாய் தனது பாதகாதிபதியுடன் சேரும்போது மாங்கல்யத்துக்கு பாதகத்தை அதாவது வேறு வழியிலான திருமணத்தைத் தந்து விடுகிறார். இதுபோல் 5,7 ஆம் அதிபதிகள் சம்பந்தம், புதன், கோது சம்பந்தம் இவை இரண்டும் கூட விருப்பத் திருமணத்தைக் கொடுக்கும்.

### திருமணம் ஆகியும் குடும்பம் அமையாதவர்கள்

சிலருக்கு 7 ஆம் அதிபதி பலத்தினால் விவாகம் முடிந்து விடும். ஆயினும் குடும்பம் எனும் அமைப்பிற்கு 2 ஆம் அதிபதியின் பலம் அவசியம். இந்த 2 ஆம் அதிபதி கெட்டுப் போய் நீசமாகி மறைவு ஸ்தானத்தில் இருந்து அந்த 2ஆம் அதிபதியின் தசா புக்தி நடக்குமானால் கணவனும் மனைவியும் குடும்ப அமைப்புக்குள் இல்லாமல் தனித்து வாழ்வர். 2 ஆம் அதிபதி வாங்கிய சாரபலன்படி வேலை விடயமாகவோ கல்வி விடயமாகவோ அல்லது சண்டை அல்லது நோய் காரணமாகவோ பிரிவு ஏற்படலாம்.

2 ஆம் அதிபதி, 6 ஆம் அதிபதி சேர்க்கை நோய் காரணமாகவும் 2 ஆம் அதிபதி, 8 ஆம் அதிபதி சேர்க்கை சண்டை, அவமானம், விபத்து காரணமாகவும் 2 ஆம் அதிபதி, 12 ஆம் அதிபதி சேர்க்கை தொலை தூரப் பயணங்கள் காரணமாகவும் பிரிவை ஏற்படுத்தும். 2 ஆம் அதிபதி குரு, சுக்கிரனால் பார்க்கப்பட்டால் பிரிவு தற்காலிகமானதாக இருக்கும். பின்னர் சேர்ந்து விடுவர்.

### பல திருமண யோகம்

ஜோதிடக் களம்

சிலர் ஒரு திருமணம் ஆவதற்கே அல்லாடிக் கொண்டிருக்க சில ஆண்களோ தெரிந்தோ, தெரியாமலோ பல திருமணங்கள் செய்து கொள்கிறார்கள். இவர்களுக்கு 7 ஆம் அதிபதியும் 11 ஆம் அதிபதியும் சேர்ந்திருப்பார்கள். அல்லது 7,11 ஆம் அதிபதிகள் பரிவர்த்தனையாக இருப்பார்கள். இத்தகைய அமைப்பு உள்ளவர்கள் பல திருமணங்கள் செய்வர். அதிலும் இராகு உடன் சேர்ந்தால் குடும்பங்களை மறைவாக நடத்திச் செல்வர்.

### திருமணம் ஆகியும் பிரம்மச்சாரி

சிலருக்கு 7 ஆம் பாவம், 7 ஆம் அதிபதி ஆகியோர் பலமாக இருந்து திருமணத்தை நடத்திவிடுவர். ஆயினும் சுக்கிரன் கெட்டுப்போய் இருந்தால் இல்லற சுகத்தை முழுமையாக அனுபவிக்க முடியாமல் திருமணம் ஆகியும் பிரம்மச்சாரி எனும் நிலையில் இருப்பர்.

### திருமணம் ஆகாமலே சம்சாரி

சிலருக்கு மனைவி, குழந்தை என்று எதுவுமே இருக்காது. ஆனால், பிரம்மச்சாரிகளாகவும் இருக்க மாட்டார்கள். இவர்களுக்கு 7 ஆம் பாவம், 7 ஆம் அதிபதி கெட்டுப்போய் திருமண பந்தம் இல்லாமல் செய்வர். ஆனால், பலமான சுக்கிரன் இவர்களுக்கு அனுபவிக்கும் யோகத்தை மட்டும் கொடுத்துவிடுவார். கூடவே 2,5 ஆம் அதிபதிகளும் கெட்டுப் போய் இருப்பர்.

### சந்நியாசிகள்

முற்றும் துறந்தவர்களே சந்நியாசிகள். இவர்களுக்கு குடும்பம், பந்தபாசம் என எதுவும் இருக்காது. இவ்விதம் சந்நியாசி ஆவதற்கு, ஒரு ஜாதகத்தில் 10 ஆம் அதிபதியோடு நான்கு அல்லது ஐந்து கிரகங்கள் சேர்ந்திருக்கும் அமைப்பு இருக்கும். முக்கியமாக 10 ஆம் அதிபதியோடு சேரும் அதிக கிரகங்களே சந்நியாசி வாழ்க்கையை ஏற்படுத்துகிறது. இந்த கிரக கூட்டணியில் சூரியன் பலம் பெற்றிருந்தால் அவர் சந்நியாசிகளின் தலைவராக இருப்பார்.

சந்திரன் பலமாக இருந்தால் நிறைய ஆன்மீகப் பயணம் மேற்கொள்வார். குரு பலமாக இருந்தால் வேதங்களில் தேர்ச்சி பெற்ற மிகச் சிறந்த சந்நியாசி ஆவார். இக் கூட்டத்தில் செவ்வாய் பலம் பெற்றால் அவர் பௌத்த மதத்தைச் சேர்ந்த சந்நியாசி ஆவார்.

ஒரு ஜாதகத்தில் இராஜயோகமும் சந்நியாசி யோகமும் சேர்ந்திருந்தால் அவர் நாட்டின் அரசரே ஆனாலும் அதிலும் பற்றற்றவராக இராஜ சந்நியாசியாகத் திகழ்வார்.

வளர்பிறைச் சந்திரன் ஒரு ஜாதகரை ஞானியாக்கி விடுகிறது. அதிக கிரக கூட்டணியில் சுபர் வீட்டில் சுபர் சேர்க்கை சுபர் பார்வை அதிகமானால் ஜாதகர் மதிப்பு மிக்க கௌரவமான சந்நியாசியாக இருப்பார்.

### போலி சந்நியாசி

அதிக கிரகக் கூட்டணி பாபர் வீட்டில் இருந்து பாபர் சம்பந்தம், பாபர் பார்வை பெற்றால் அவர் போலி சந்நியாசியாக இருப்பார். இக்கிரக கூட்டத்தில் சுக்கிரன் பலமானால் பெண்களை விரும்பும் ஜாலி சந்நியாசியாக இருப்பார்.

இக்கிரக கூட்டத்தில் தேய்பிறைச் சந்திரன் இருந்தால் அவர் மிக கஷ்டப்படுகிற துக்கம் நிறைந்த எதுவும் கிடைக்காத பரதேசி சந்நியாசியாக இருப்பார்.

ஒவ்வொரு மனிதனும் இல்லற வாழ்வில் ஈடுபட்டு அதன் சுக துக்கங்களை அனுபவித்து அதனூடே இறைவனை வணங்குவதையே கடவுள் பெரிதாக நினைக்கிறார். இல்லறம் என்பதே நல்லறமாகிறது. ஒவ்வொருவரின் ஜாதக அமைப்புக்கள், அவர்களின் இல்லற வாழ்க்கையின் சுகத்தையும் அல்லது சந்நியாசி யோகத்தையும் நிர்ணயிக்கிறது.

# நூல் வெளியீடு

யாழ். பல்கலைக்கழக மூன்றாம் வருட இசைத்துறை மாணவன் நெடுந்தீவு க.யோகேஸ்வரனின் மூன்றாவது கவிதைத் தொகுப்பான *காற்றிடைவெளியே* என்னும் நூல் வெளியீட்டுவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் நுண்கலைப்பீடத்தில் யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கலாநிதி தர்ஷனன் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மஹரகம தேசிய கல்வி நிறுவக அழகியற்றுறை உதவி விரிவுரையாளர் ராகினி திருக்குமரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ)

# ஆஸி.செல்ல முயன்ற 66 பேர் கைதாகினர்

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமான முறையில் படகில் சென்று கொண்டிருந்த 66 பேரை ஹிக்கடுவை கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் கைது செய்துள்ளதாகத் தெரிவித் துள்ளனர்.

வடபகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் என கடற்படையினர் தெரிவித்தனர்.

66 பேருடன் பயணித்த படகு கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு தற்போது காலி கடற்படை துறை முகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதெனவும் ஹிக்கடுவை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 66 பேரில் 19 சிறுவர்கள் மற்றும் 12 பெண்கள் உள்ளடங்குவதாகவும் படையினர் தெரி வித்துள்ளனர். (அ-2)





முஸ்லிம் காங்கிரசின் வன்னி பிராந்திய ஆதரவாளர்களுடனான கலந்துரையாடல் வவுனியாவில் இடம்பெற்றது. இதன் போது கட்சியின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# ஒழுக்க விழுமியங்கள் பற்றிய கலந்துரையாடல்

இன்றைய இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் தேவைகள், ஒழுக்க விழுமியங்கள் பற்றிய கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாநகர சபை முதல்வர் மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஒன்றுகூடலில் சமய பெரியோர்கள், கல்லூரிகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்கள், பல்கலைக்கழகச் சமூகம், புத்திஜீவிகள், வர்த்தகப் பெருமக்கள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் உட்பட அனைவரும் பங்கெடுக்கவுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

449



## ஷூகூர் முத்திரை

வெகு நாட்களுக்கு முன்னால் ஐதராபாத் நகரின் ஒரு பகுதியில் ஷூகூர் என்பவன் இருந்தான். அவன் ஏழை. வேலை ஒன்றும் கிடைக்காமல் திண்டாடி வந்தான்.

அவனுக்கு ஒருநாள் ஒரு யோசனை தோன்றியது. உடனே அதன்படி செய்வது என்று துணிந்து விட்டான். ஒரு ஆசாரியிடம் போய் ஒரு முத்திரையை செய்து கொண்டான்.

அதை எடுத்துக் கொண்டு உயர்நீதிமன்றத்தின் வாசலில் உட்கார்ந்து கொண்டான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு வரும் ஒவ்வொரு மனுவின் பேரிலும் தன்னிடமிருந்த முத்திரையைக் குத்தி அதற்காக ஒரு பைசா வசூலித்து வரலானான்.

எல்லோரும் அதை அரசாங்கம் செய்த ஒரு புதிய ஏற்பாடு என நினைத்து அதன்படியே தங்கள் மனுக்களில் ஷூகூரிடம் முத்திரை போடச்சொல்லி வாங்கிக்கொண்டு செல்லலாயினர். இப்படியாக நாட்கள், மாதங்கள், வருடங்களென உருண்டன. ஷூகூருக்கும் நிறையப் பணம் கிடைத்துவிட்டது.

அவன் சிறிது நாட்களுக்குப் பின்பு முத்திரை போட இரண்டு பைசாக்கள் வீதம் வசூலித்து ஒரு பைசாவைத் தான் எடுத்து வைத்துக்கொண்டு ஒரு பைசாவை ஒரு பையில்போட்டு சேர்த்து வைத்து வரலானான்.


நீதிமன்றத்திலும் கூட ஷூகூரின் முத்திரை எல்லா தஸ்தாவேஜூகளும் இருந்தன. ஒவ்வொரு மனுவிலும் அத்தகைய முத்திரை இருந் தாலே அது சரியான மனு என்று எல்லா அதிகாரிகளும் கருதி வந்தனர்.

ஒருநாள் ஷூகூர் உடல் நலம் இல்லாது போனதால் உயர்நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை. அன்றைய மனுக்களில் ஷூகூரின் முத்திரை இல்லாது போனதால் குமாஸ்தாக்கள் எந்த மனுவையும் ஏற்க மறுத்தனர்.

முத்திரை போடவோ யாரும் இல்லை. எனவே உயர் அதிகாரிகளிடம் புகார் போயிற்று. அப்போது தான் அந்த முத்திரை எதற்கு என்ற கேள்வி பிறந்தது.

உடனே ஒரு பழைய மனுவை எடுத்துப்பார்க்க அந்த முத்திரையில் குருட்டு தர்பார் ஷூகூர் முத்திரை என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு இருந்தன. அது அரசாங்கத்தின் முத்திரையே அல்ல.

அந்த விடயம் நாவாவிற்கு தெரியவரவே உடனே ஷூகூரைப் பிடித்து வரும்படி அவன் கட்டளை யிட்டான்.



ஷூகூரும் பையில் சேர்த்து வைத்த பணத்தோடு வந்து சேர்ந்தான். அந்தப் பணத்தை நவாப்பிடம் கொடுத்து இதில் முப்பதாயிரம் ரூபாய்கள் இருக்கின்றன. இது நான் இப்படி முத்திரை குத்தி வசூல் செய்தது எனக்கூறிவிட்டு தான் அந்த வேலையை ஆரம்பித்தது எதற்காக என்பதை விபரமாகக் கூறினான்.

நவாப் அதைக்கேட்டு வியப்பும் சந்தோசமும் அடைந்தான். உடனே அவன் இனியும் இதே வேலையைத் தொடர்ந்து செய். உன்னை ஒரு உயர் அதிகாரியாக மாதச் சம்பளத்தில் நியமித்துள்ளேன்.

உன்னுடைய முத்திரையில் குருட்டு என்ற வார்த்தையை எடுத்துவிடு. தர்பார்- ஷூகூர் முத்திரை என்ற வார்த்தைகள் மட்டுமே இருக்கட்டும் என்று கூறி அனுப்பினான்.

ஷூகூரும் தனது முத்திரையுடன் உத்தியோகம் பார்த்துக் கொண்டு சுகமாகவே வாழ்ந்து வந்தான்.


**அம்புலிமாமா கதைகள்**

## யார் தவறு?

ஒரு விறகு வெட்டி காட்டிலிருந்து விறகு வெட்டிக்கொண்டு ஊருக்குள் விற்கச் சென்றான். தெருவில் கூட்டம் அதிகமாக இருந்ததால் அவ் வழி விடுங்கள் எனக் கத்திக்கொண்டே முன்னே சென்றான்.

பாரமான சுமையோடு வரும் அவனுக்கு எல்லோரும் வழிவிட்டனர். ஆனால் ஒரே ஒரு படாடோபப் பேர்வழி மட்டும் வழிவிடவில்லை. விறகு வெட்டிக்கொண்டு சென்ற சுமையில் அவனது ஆடைகள் சிக்கிக் கிழிந்து போயின. அவன் விறகு வெட்டியை இழுத்துக் கொண்டு நீதிபதி முன் சென்றான். கனம் நீதிபதி அவர்களே பாருங்கள் இந்த விறகு வெட்டி வேண்டுமென்றே என் ஆடைகளைக் கிழித்து விட்டான் என்று குற்றஞ் சாட்டினான்.

நீதிபதி விறகு வெட்டியை நோக்கி என்னப்பா இவருடைய உடையை உன் விறகினால் கிழித்து விட்டாயாமே? என்றார். விறகு வெட்டி பதில் சொல்லவில்லை. என்னப்பா? வேண்டுமென்றே செய்தாயா? தற்செயலாக நிகழ்ந்ததா? என்றார். அதற்கும் விறகுவெட்டி பதிலளிக்கவில்லை. அப்போது அவர் இந்த ஊமையைப் போய் இழுத்துக்கொண்டு வந்தாயே என்று அந்த படோடோபக்காரனைப் பார்த்துக் கேட்டார்.



அவனும் இவனா ஊமை? தெருவில் விலகுங்கள் வழி விடுங்கள் ஐயா என்று காது செவிடு படக் கத்தினானே என்றான். அப்போது நீதிபதி அப்படியா சங்கதி அவ்வளவு பலமாக அவன் கத்தியும் வழி விடாது நின்றது என் தப்பிதமே. நான் இந்த வழக்கை தள்ளுபடி செய்கிறேன் எனக்கூறி அவர்களை அனுப்பி விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

38



மந்திரிமனைக்கு காவலர்கள் சென்றபோது பரநிருப சிங்கத்தின் மனைவி மாதவி தேவி உட்பட பன்னிருவர் சிறைப்பட்டனர்.

"அவர்கள் அனைவரையும் கோப்பாய்க் கோட்டையில் அடையுங்கள்" என்றான் மன்னன்.

யாழ்ப்பாண அரசர்களுக்கு கோப்பாயில் ஒரு பாதுகாப்பான கோட்டை இருந்தது. மன்னர்களின் ஓய்வு கால அரண்மனையாகவும் பாதுகாப்பு அரணாகவும் இக்கோட்டை விளங்கியது. சுடுசெங்கற்களினாலும் மண்ணாலும் நாலாபக்கங்களும் உயரமான கோட்டைச் சுவர்கள் கட்டப்பட்டிருந்தன. கோட்டையினுள்ளே சுண்ணாம்புக் கற்களினாலும் அமைக்கப்பட்டிருந்தது. மன்னனின் இராணுவப்படை

## கோப்பாய் கோட்டை

ஒன்று கோப்பாயில் நிறுத்தப்பட்டிருந்தது.

நேருக்கு நேர் எதிர்த்து போர்த்துக்கேயரை வெற்றி கொள்ள முடியாதநிலை தோன்றியதை சங்கிலி உணர்ந்தான். மன்னனிடம் 40 பீரங்கிகளும் 500 நிரப்புத் துவக்குகளும் இருந்தன. சங்கிலியின் மகன் புவிராசன் 1500 தமிழ் வீரர்களுடன், போர்த்துக்கேயருடன் போராடியும் வெற்றி பெறமுடியவில்லை. பறங்கிகளின் குண்டுமாரிக்கு தமிழர் படை எதிர்நிற்க முடியவில்லை.


வெற்றி கண்ட பறங்கிப் படை வீரர்கள் 1200 பேருடன் நல்லூரை நோக்கி பிரகன்ஸா அணிவகுத்தான். தற்போது போர்த்துக்கேயரின் கரம் ஓங்கியதைக்கண்ட சங்கிலி நல்லூர் அரண்மனையின் ஒருபகுதிக்கு தீமூட்டி விட்டு அரண்மனையிலிருந்த திரவியங்களை எடுத்துக்கொண்டு அரச குடும்பத்தினருடன் கோப்பாய்க் கோட்டைக்கு இடம்மாறினான்.

"அரசே இந்த இடமாற்றம் அவசியம் தானா?" என்று அரசமாதேவி வினவினாள்.

"அவசியம்தான் தேவி. மன்னனைப் பிடித்தாற்றான் யுத்தத்தில் வெற்றிகிட்டியதாகும். நான்ஒரு புது யுத்தம் நடாத்த இருக்கிறேன். நாளை காலை வல்லை நதியின் முகத்துவாரத்தில் உப்புமாலில் வருணகுலத்தானின் தஞ்சாவூர் படை இறங்கவுள்ளது. நம்மைத் தேடி கோப்பாய்க் கோட்டைக்கு போர்த்துக்கேய கப்பித்தான் மார்டீன் படை அனுப்பியுள்ளானாம். அப்படை வருணகுலத்தானால் துவம்சம் செய்யப்படும்"

"யாழ்ப்பாணத்தினைக் கைப்பற்றியதும் தன்னிடம் முடியை ஒப்படைக்குமாறு கேட்டு பரநிருபசிங்கர் சென்றுள்ளாராம்"

"அது சாத்தியப்படாது தேவி. கோவை சென்று அங்கு வாழும் பிரகன்சாவின் அனுமதி பெறவேண்டும். அதற்கு முதல், மதம்மாற வேண்டும். முதன்மந்திரியால் உடன் இவ்வளவும் செய்வது சாத்தியமல்ல"





போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட தேவாலயம்- மல்லாகம்

"இங்கு பிடித்து வைத்திருக்கும் அரசியல் கைதிகளை என்ன செய்வதாக உத்தேசம்?"

"வேறென்ன செய்வது? இராசத்துரோகிகளுக்கு வழங்கும் தண்டனைதான்...."

"அப்படியென்றால்...?"

"நாங்கள் இக்கோட்டையைவிட்டு வேறிடம் செல்ல நேர்ந்தால், கோட்டை வாசலில் அவர்கள் சிரச் சேதம் செய்யப்படுவார்கள்... இங்கு வரும் போர்த்துக்கேயர் கோட்டை வாசலில் பன்னிரு முண்டங்களையும் தலைகளையும் காண்பர்"

துடித்துப்போனாள் அரசி.

"அவர்களில் ஒருவர் தங்கள் அண்ணியார்? மகாமந்திரியாரின் மனைவியார்..."

"அதனால் துரோகம் மறைந்துவிடுமா?"

இரவு கோப்பாய் கோட்டையைத் தழுவியது. பணிப்பெண்கள் விளக்குகளை ஏற்றினர்.

"அரசே பட்டத்து இளவரசன் புவிராசனையும் சேனாதிபதி சண்பகமாதாக்கரையும் அவர்கள் சிறைபிடித்துவிட்டார்கள். அவர்களை விடுவிக்க என்ன செய்யப்போகிறீர்கள்?"

"யோசிக்கிறேன் தேவி... காலம் வழிவிடும்"

செங்கை ஆழியான்

(தொடரும்)

# தமிழ் சிவில் வெளி



## -ஒரு ஆய்வின் தொடக்கம்

தன்னியல்பான தமிழ் சிவில் வெளி என்பது யாரும் நடாமலேயே வளர்ந்த ஒரு காடு. அது. யாரும் நீர் விடாமலேயே வளர்ந்த ஒரு புல்வெளி அது. தன்னியல்பாக அது ஈழத்தமிழர்களின் சமூக, பொருளதார, கலாசார மாற்றங்களுக்கு ஏற்ப வளர்ந்து உருவாகியது. ஊர்கள் தோறும் சனசமூக நிலையங்கள் இருந்தன. அனேகமாக எல்லாக் கடற்கரைகளிலும் மீனவ சமூகங்கள் இருந்தன. விவசாயிகள் மத்தியில் நீர் முகாமைத்துவ அமைப்புகள் இருந்தன. விளையாட்டுக் கழகங்கள், ஆலய நிர்வாக சபைகள், நாடகக் குழுக்கள், அன்னதான சபைகள் போன்ற இன்னோரன்ன சமூக அமைப்புகள் இயங்கின. இவை யாவும் மேலிருந்து கீழ் நோக்கிய நிதி ஊட்டத்தோடு அல்லது அதிகாரத்தின் அமைவாக உருவாக்கப்பட்டவை அல்ல. அந்த ஊர்களில் அந்தந்த சமூகங்களின் மத்தியில் அல்லது சாதி, மதப் பிரிவுகளின் மத்தியில் தன்னியல்பாக உருவாகின. எனவே, எந்த சமூக அடித்தளத்திலிருந்து அவை பிறந்தனவோ, அச்சமூகத்தின் பலங்களையும் பலவீனங்களையும் அவை பிரதிபலித்தன. அவற்றிற்குள்ளும் அவற்றுக்கிடையிலேயும் பால் அசமத்துவம், சாதி அசமத்துவம், ஊர்வாதம், சிறுகுறிச்சிவாதம், மதவேறுபாடுகள் என்பன இருந்தன.

இவைதவிர, மேலிருந்து கீழ் நோக்கி உருவாக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட உதவிகளின் பின்னணியில் கிழிருந்து உருவாக்கப்பட்ட கமக்கார, திருச்சபை அமைப்புகள் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றன வெற்றிகரமாக செயற்பட்டன. அது ஐ.என்.ஜி.ஓ அரசியல் இல்லாத ஒருகாலம். அந்நாட்களில் சங்கக்கடைக்கு ஒரு முக்கியத்துவம் இருந்தது. இலங்கைத் தீவு முழுவதிலும் வெற்றிகரமாக கூட்டுறவுச் சங்கங்களை முன்னெடுத்த மாவட்டங்களில் யாழப்பாணத்திற்கென்றொரு முதன்மை ஸ்தானமுண்டு.

ஆயுதப்போராட்டத்தின் எழுச்சியோடு மேற்கண்ட சிவில் அமைப்புகள் குறிப்பாக, சனசமூக நிலையங்களில் கணிசமானவை ஆயுதம் ஏந்திய இயக்கங்களின் கிராமமட்ட நடவடிக்கைக் களங்களாக மாறின.

இதனால், ஆயுதப்போராட்டம் தீவிரமடைந்தபோது சனசமூக நிலையங்களும் தாக்குதலுக்கு இலக்காகின. அவற்றின் நிர்வாகிகள் தாக்கப்பட்டார்கள். அல்லது கைது செய்யப்பட்டார்கள். அல்லது கொல்லப்பட்டார்கள். அல்லது காணாமல் போனார்கள் அல்லது புலம்பெயர்ந்தார்கள்.

குறிப்பாக, விடுதலைப்புலிகளின் எழுச்சியோடு, அவர்களுடைய அரசியல் பிரிவின் நிர்வாக கட்டமைப்பானது ஒரு கட்டத்தில் தன்னியல்பாக தோன்றிய, மேற்கண்ட சிவில் அமைப்புகளை உள்ளீர்த்துக்கொண்டது. இதனால், மேலிருந்து கீழ்நோக்கி உருவாக்கப்பட்ட ஒரு அரசியல் பிரிவில் கிராமிய மட்ட அலகுகளாக அல்லது ஒன்றியங்களாக, சமாஜங்களாக இச்சிவில் குழுக்கள் மாற்றப்பட்டன. அதாவது, தன்னியல்பாக தோன்றிய சிவில் குழுக்கள் ஆயுதப் போராட்டத்தின் எழுச்சியின் ஒரு விளைவாக அதன் அரசியல் பிரிவின் சிறிய மற்றும் பெரிய அலகுகளாக மாறின. ஆயுதப்போராட்டத்தின் வீழ்ச்சியோடு இச்சிவில் அமைப்புகள் ஒன்றில் செயழிழந்தன. அல்லது முடங்கிப்போயின. அல்லது பிறிதொரு அதிகாரத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன.

இப்பொழுது ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகள் கழிந்திருக்கும் ஒரு பின்னணியில் சிவில் குழுக்களை உருவாக்குவது பற்றியே அதிகம் சிந்திக்கப்படுகின்றது. இதை இன்னும் துலக்கமாகச்சொன்னால்ஏதோ ஒருகட்சியின் அல்லது ஏதோ ஒரு ஐ.என்.ஜி.ஓ நிகழச்சி நிரலுக்கு அமைய உருவாக்கப்படும் அமைப்புகளே இவை. மாறாக கீழிருந்து மேல்நோக்கி தமது நிலத்தில் தன்னியல்பாக முகிழும் அமைப்புகள் அல்ல. இவ்வாறு உருவாக்கப்படும் சிவில் அமைப்புகள் ஏதோ ஒரு நிகழ்ச்சி நிரலின் கருவிகளாகவோ கட்சிகளின் முன்னணி அமைப்புகளாகவோ மாறக்கூடிய சாத்தியக் கூறுகளே அதிகம்.

மேலும், ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான இப்போதுள்ள அரசியல் சூழலில் சிவில் குழுக்களை பற்றி உரையாடும்போது பின்வரும் புதிய வளர்ச்சிகளை கவனத்தில் கொள்ள வேண்டி இருக்கிறது. முதலாவது - தோற்கடிக்கப்பட்ட தரப்பாக இருப்பதிலுள்ள அச்சம். இரண்டாவது - இவ்வச்சத்தின் காரணமாக நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் மேலோங்கி வரும் தனிமனிதவாதம். அதாவது, ஒரு குழுவாக செயற்படுவதில் உள்ள ஆபத்துகள் காரணமாக தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ள முற்படுகின்ற அல்லது தலையை ஓட்டுக்குள் உள்ளிழுத்துக் கொள்ளும் [illegible] வது– தகவல் புரட்சியின் விளைவாக வீட்டுக்குள் இருந்தபடி இணையத்தை நுகர்வதும், கேபிள் தொலைக் காட்சிகளின்முன் மொய்த்துப்போய்க் கிடப்பதுமான ஒரு போக்கு. இதுவும் சமூக ஊடாட்டத்திற்கு தடையானது. தனிமனித வாதத்தை பலப்படுத்துவது, அதேசமயம் இணையப் பரப்பை குறிப்பாக, சமூகவலைத் தளங்களை வெற்றிகரமாக கையாளுவதன் மூலம் சைபர் சிவில் சமூகங்களை உருவாக்க முடியும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். நான்காவது– உலக மயமாதலின் விளைவுகளில் ஒன்றாகிய ஐ.என்.ஜி.ஓ அரசியல். இதுவும் சிவில் குழுக்களை மேலிருந்து கீழ்நோக்கி உருவாக்கும் ஒரு பொறிமுறையை ஊக்குவிக்கின்றது.

மேற்கண்ட புதிய வளர்ச்சிகள் மற்றும் போக்குகளின் பின்னணியில்தான் தமிழ் சிவில் வெளியை பலப்படுத்துவது பற்றி சிந்திக்க வேண்டி இருக்கிறது. அதாவது, கீழிருந்து மேலெழும் சிவில் அமைப்புகளை கட்டியெழுப்ப கடினமான ஓர் அரசியல் சூழலில் தமிழ் சிவில் வெளியை பலப்படுத்துவது என்பது பிரதானமாக இரண்டு தளங்களில் மேற்கொள்ளப்படமுடியும். இதை இன்னொரு விதமாகச் சொன்னால் வெளிவளமாகவும் உள்வளமாகவும் மேற்கொள்ளப்படவேண்டுமெனலாம்.

வெளிவளமாக என்று இங்கு கருதப்படுவது. தமிழ் சிவில் வாழ்வில் படைத்துறைப் பிரசன்னத்தை அகற்றுவது பற்றியதாகும். உள்வளமாக வென்று கருதப்படுவது தமிழ் அரசியலின் அகஜனநாயக வெளியைப் பலப்படுத்துவது என்ற பொருளில் ஆகும்.

எவ்வளவுக்கெவ்வளவு இராணுவமய நீக்கம் நிகழ்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு சிவில் மயமாக்கமும் நிகழும். சிவில் பரப்பு வெளிக்கும் இன நல்லிணக்கத்திற்குமான பிரதான முன்நிபந்தனையே இராணுவமய நீக்கம்தான். இன நல்லிணக்கத்திற்கான பிரதான தொடக்கப் புள்ளிகளில் அதுவும் ஒன்று. இப்போதுள்ள நிலைமைகளின்படி, அது முழுக்க முழுக்கத் தமிழர்களின் கைகளில் இல்லை. அதிகபட்சம் அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்களிற்தான் தங்கியிருக்கின்றது. அத்தகைய அழுத்தங்களை கொடுக்குமளவுக்கு அனைத்துலக சமூகத்தை தமிழர்கள் தம்மை நோக்கி வளைப்பதற்குரிய பிரதான முன் நிபந்தனைகளில் ஒன்று தமிழ்அரசியலின் அகஜனநாயக வெளியை ஆகக்கூடிய மட்டும் பலப்படுத்துவதுதான். இது முழுக்க முழுக்க தமிழர்களின் கைகளில்தான் உண்டு. அதாவது, உள்வளமாகச் செய்யப்பட வேண்டியது. இதை இன்னும் துலக்கமாகச் சொன்னால், தமிழ்த்தேசியத்தின் ஜனநாயக அடித்தளத்தைப் பலப்படுத்துவது எனலாம்.

தோற்கடிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் அகஜன்நாயகத்தைப் பற்றிச் சிந்திப்பது என்பது அதுவும் தென்னிலங்கையில் யுத்த வெற்றிவாதம் கோலோச்சும் ஓர் அரசியல் சூழலில் அதை வற்புறுத்துவது என்பது ஏறக்குறைய தமிழர் களை உழவியல் ரீதியாக நிராயுதபாணிகளாக்குவதற்குச் சமம் என்று சிலர் வாதிடக்கூடும்.

ஆனால், இது தோல்வியை "மம்மியாக்கம்" செய்ய முற்படுவோரின் வாதம்தான். தோல்விக்கான பிரதான காரணங்களில்ஒன்றே தமிழ்த்தேசியத்தின் உள்ளடக்கப் போதாமைதான் ஒரு தேசிய இனத்தின் ஜனநாயக அடிப்படைகளை பலப்படுத்துவது என்பது எந்த வகையிலும் அத்தேசிய இனத்தை பலவீனப்படுத்தாது. மாறாக இப்போதுள்ள அனைத்துலக யதார்த்தத்தின்படி அது ஒரு அடிப்படைப் பலம்.

எனவே, தோல்விகளோடு வாழ விரும்பாத எல்லாத் தமிழர்களும் தமிழ் அரசியலின் அகஜனநாயக வெளியை பலப்படுத்துவது பற்றி சிந்திப்பதே ஒரே வழி. அதாவது தமிழர்கள் தங்களை முதலில் உள் நோக்கிப் பலப்படுத்தப்பட வேண்டும்.

குளோபல்தமிழ் நியூஸ்நெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கி அட்டை மோசடியில் ஐவர் கைது; ஏ.ரி.எம். அட்டைகள், பணம் என்பன மீட்பு

**தனியாருக்குச் சொந்தமான வங்கி அட்டைகளைப் பயன்படுத்தி தனியார் வங்கிகளிலிருந்து சுமார் மூன்று கோடி ரூபாவுக்கு அதிகமான பணத்தை மோசடி செய்த ஐந்து சந்தேக நபர்களை குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர். பல்வேறு பிரதேசங்களில் வைத்து மடக்கிப் பிடிக்கப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 46 வங்கி அட்டைகளையும் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் ஒரு தொகையையும் சி.ஐ.டியினர் பறிமுதல் செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.**

மிகவும் சூட்சுமமான முறையில் பண மோசடிகளை மேற்கொண்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள தர்மபுரம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புதுக்குடியிருப்பு, களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஐந்து சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இம் மோசடிக் கும்பலில் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த இரு பெண்களும் உள்ளனரென அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 2012 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி காலையில் பிரான்ஸ், கனடா வங்கிகளினால் விநியோகிக்கப்பட்ட வங்கி அட்டைகளைப் பயன்படுத்தி ஏ.ரி.எம். இயந்திரங்கள் மூலம் 3 கோடியே 28 இலட்சத்து 71 ஆயிரம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கடந்த ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய விசாரணைகளை ஆரம்பித்த சி.ஐ.டியினர் மூன்று கோடி ரூபாவுக்கு அதிகமான பணத்தை தன்னியக்க இயந்திரங்களிலிருந்து வங்கி அட்டைகளை பயன்படுத்தி பெறப்பட்டுள்ளமையை உறுதி செய்துள்ளனர்.

இதனையடுத்து விசாரணைகளை பல்வேறு கோணங்களில் மேற்கொண்டு வந்த சி.ஐ.டியினர் சுமார் ஒருவருட காலம் மேற்கொண்ட விசாரணைகளுக்கு பின்னர் கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி கொழும்பில் வைத்து தர்மபுரம், பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித் துறை பிரதேசங்களைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்களையும் புதுக்குடி யிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த பெண் சந்தேக நபர் ஒரு வரையும் கைது செய்துள்ளனர்.

கொழும்பில் கைது செய்யப்பட்ட இவ் நான்கு சந்தேக நபர்களிடமிருந்து 46 வங்கி அட்டைகளையும் அவர்களது வங்கிக் கணக்குகளிலிருந்து 19 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா பணத்தையும் பறிமுதல் செய்தனர்.

கடந்த 25 ஆம் திகதி புதுக்கடை 3 ஆம் இலக்க நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர்களை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள் ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தொடர்ச்சியாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி இம் மோசடியுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வைத்து விடேச அதிரடிப்படையினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இவரிடமிருந்து பெறப்பட்ட தகவல் களின் அடிப்படையில் அவரது காதலியான களுவாஞ்சிக்குடி பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணை மடக்கிப் பிடித்துள்ளனர்.

சந்தேக நபரிடமிருந்து 14 இலட்சத்து 86 ஆயிரத்து 797 ரூபா பணத்தையும் அவரது வங்கிக் கணக்கிலிருந்து 89 இலட்சத்து 27 ஆயிரத்து 811 ரூபாய் பணத்தையும் பெற்றுள்ளனர்.

சந்தேக நபர்கள் குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸாரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு தொடர்ந்தும் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ-2)

# தேசிய யுத்த வீரர்கள் மாதம் இன்று தொடக்கம் ஆரம்பம்

இவ்வாண்டுக்கான தேசிய யுத்த வீரர்கள் மாதம் இன்று தொடக்கம் எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ள **தாய் நாட்டு யுத்த வீரர்களுக்கான தேசத்தின் மரியாதை** என்ற வாசகம் பொறிக்கப்பட்ட முதலாவது கொடியை இன்று அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அணிவிக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து தேசிய யுத்த வீரர்கள் மாதம் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசிய யுத்த வீரர்கள் மாதத்தை முன்னிட்டு கொழும்பு உட்பட நாடு தழுவிய ரீதியில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளுப்பிட்டியிலுள்ள தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் அதன் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மன் ஹுலுகல்ல தலைமையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

தாய் நாட்டை விடுதலைப் புலிகளிடம் இருந்து பாதுகாத்த படைவீரர்களுக்கு உலகின் எந்த ஒரு நாட்டிலும் இல்லாத வகையில் கௌரவத்தையும் நலன்புரி வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுத்துள்ளது.

நாட்டிற்கு சமாதானத்தை பெற்றுத்தந்து ஒருமைப்பாட்டை ஏற்படுத்திய படை வீரர்களுக்கும் அவர்களது பிள்ளைகள் மற்றும் குடும்ப உறவினர்களுக்கு பாதுகாப்பு அமைச்சும் ரணவிரு சேவை அதிகார சபையும் பல்வேறு வேலைத் திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறது.

இதன் ஓர் அங்கமாகவே வருடாந்தம் மே மாதம் 8 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 8 ஆம் திகதி வரையான காலத்தை தேசிய யுத்த வீரர்கள் மாதமாக அனுஷ்டித்து வருகின்றோம்.

தாய் நாட்டுக்காக தம்மை அர்ப்பணித்த படை வீரர்களை கௌரவிப்பதும் நாட்டில் சமாதானம் நிலவுவதை ஞாபகப்படுத்துவதுமே இதன் நோக்கமாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பங்குபற்றலுடன் கொழும்பில் பிரதான வைபவங்கள் இடம் பெறவுள்ளதுடன் ஒன்பது மாகாணங்களிலும் மாகாண ஆளுநர்கள், முதலமைச்சர்கள் தலைமையில் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெறவுள் ளன.

வட மாகாணத்திற்கான நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி படைவீரர் ஞாபகார்த்த நினைவு தூபிக்கு அருகிலும் 14 ஆம் திகதி கிழக்கு மாகாணத்திற்கான நிகழ்வு திருகோணமலை கோட்டையிலும் வட மத்திய மாகாணத்திற்கான நிகழ்வு அநுராதபுரம் படை வீரர் ஞாபகார்த்த நினைவு தூபிக்கு அருகிலும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் மத்திய மாகாண நிகழ்வு கண்டி மைலபிட்டி மைதானத்திலும் 16 ஆம் திகதி தென் மாகாண நிகழ்வு காலியிலும் வடமேல் மாகாணத்திற்கான நிகழ்வு குருநாகல் மாளிகாபிட்டி மைதானத்திலும் சப்ரகமுவ மாகாணத்திற்கான நிகழ்வு இரத்தினபுரியிலும் இடம் பெறவுள்ளன என்றார். (அ-2)

## "மகாபாரதம்" சொற்பொழிவு

கோப்பாய் தெற்கு அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்பாள் ஆலய வரு டாந்த அலங்கார உற்சவ பெருவிழா கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

இவ் அலங்கார உற்சவ காலங்களில் தினமும் மாலை 6 மணி முதல் 7 மணிவரை மகாபாரதம் என்னும் இதிகாச சொற்பொழிவை மதுரகவி. காரை. எம். பி அருளானந்தன் நிகழ்த்தி வருகின்றார்.

சொற்பொழிவு நிறைவில் சொற்பொழிவுரை கேட்டவர்களிடமிருந்து வினாக்கள் கேட்கப்பட்டு விடையளிப்பவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன. (அ)

# அசாத் சாலி கைது செய்யப்பட்டமைக்கு ஆ.ம. உரிமைகள் ஆணைக்குழு கண்டனம்


அசாத் சாலி கைது கெய்யப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை அரசியல் நடவடிக்கை ஒன்றுக்காகப் பயன்படுத்துதல் இலங்கையில் இடம்பெறும் பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இது தனிமனித சுதந்திரத்திற்கும் சட்டவாட்சிக்கும் முரணான ஒரு விடயம் என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன்,

கைதுசெய்யப்படும் ஒருவருக்கும் அரசியலமைப்புக்கு அமைய அதற்கான காரணம் தெளிவாக தெரிவிக்கப்பட வேண்டும் எனவும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நீதி அமைச்சர் ஹக்கீம் அசாத் சாலி கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டுள்ளதாகவும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ-2)





நல்லூர் பிரதேச சபை மற்றும் கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் உலக புத்தகதின அனுஷ்டிப்பும் பரிசளிப்புவிழாவும் அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. இந் நிகழ்வின் போது விருந்[illegible] பேராசிரியர் மா.சின்னத்தம்பி சிறுமிக்கு பரிசில் வழ[illegible]

## விபச்சார விடுதி முற்றுகை

கம்பஹா- கெகெல்வத்துகொட-யக்கல பிரதேச வீடொன்றில் இயங்கி வந்த விபச்சார விடுதி ஒன்றை கம்பஹா பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

குறித்த விபச்சார நிலையம் முற்றுகையிடப்பட்ட போது மூன்று பெண்களும் ஒரு ஆணும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் 21,23,42 வயதுடையவர்கள் எனவும் குருநாகல், வலவிவத்த, சாதிக்கவத்த ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் கம்பஹா நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்காக பொதுபலசேனா அமைப்பு உருவாக்கம்

## அசாத் சாலி கைதுக்கும் கண்டனம் வெளியிட்டார் சிவசக்தி ஆனந்தன்

கொழும்பு மாநகர சபையின் மேஜரான அசாத் சாலி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமையானது வன்மையாகக் கண்டிக்கத்தக்க ஒன்றாகுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் வருமாறு,

தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை இச்சம்பவம் உணர்த்தியிருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மாற்றுக் கருத்துக்களை முன்வைப்பவர்களையும் அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிப்பவர்களையும் ஒடுக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளில் ஒன்றாகவே இதனை நாம் பார்க்கின்றோம்.

ஊடகத்துறை, நீதித்துறை மற்றும் உரிமைச் செயற்பாட்டாளர்களை ஒடுக்கும் வகையில் அரசாங்கம் ஏற்கனவே தமது செயற்பாடுகளை மேற்கொண்டது. இப்போது தம்மை விமர்சிப்பவர்களையும் அரசாங்கம் இலக்கு வைக்கின்றது என சிவசக்தி ஆனந்தன் தெரிவித்திருக்கின்றார்.

இந்திய சஞ்சிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டி தொடர்பாகவே அசாத் சாலி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பேட்டியில் சில விடயங்கள் தவறாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளதாக அசாத் சாலி உடனடியாகவே குறிப்பிட்ட சஞ்சிகைக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையிலும் குறிப்பிட்ட பேட்டியைக் காரணம் காட்டி அசாத் சாலி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதை அரசியல் பழிவாங்கலாகவே கருத வேண்டியுள்ளது.

முஸ்லிம் மக்களுக்கு எதிராக அண்மைக் காலங்களில் பெருமளவு வன்முறைகள் ஏவி விடப்பட்டன. அவர்களுடைய மதஸ்தலங்கள் தாக்கப்பட்டன. வர்த்தக நிலையங்கள் இலக்கு வைக்கப்பட்டன. ஹலால் இல்லாதொழிக்கப் பட்டது.

தமிழர்களுக்கு எதிராக பௌத்த- சிங்கள பேரினவாதிகள் முன்னெடுத்த தாக்குதல்களின் தொடர்ச்சியாகவே தற்போது- முஸ்லிம்கள் இலக்குவைக்கப்படுகின்றனர்.

இவை அனைத்தையும் மௌனமாக பார்த்துக்கொண்டிருந்த அரசாங்கம் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த அசாத் சாலியைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

தமிழர்கள் மட்டுமின்றி முஸ்லிம்களும் இன்று ஒடுக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் பொதுபல சேனா என்ற அமைப்பின் மூலம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. அதற்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்க அரசாங்கம் தயாராகவில்லை.

இன நல்லுறவை சீர்குலைக்கும் அவர்களுடைய செயற்பாடுகளைத் தடுக்க முடியாதுள்ள அரசாங்கம் இன உணர்வுகளைத் தூண்டிவிடுகின்றார் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதச் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அசாத் சாலியைக் கைது செய்திருப்பது கடுமையாக கண்டிக்கப்பட வேண்டியவிடயமாகும்.

அதேவேளையில் தமிழ் -முஸ்லிம் மக்கள் இணைந்து செயற்பட வேண்டிய அவசியத்தையும் இச்சம்பவம் உணர்த்தியுள்ளதாகவே நாம் கருதுகின்றோம் என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ-2)

## 19 ஆவது திருத்தச்சட்டம் வெறும் வதந்தியே

### அமைச்சர் நிமால் தெரிவிப்பு

19 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பிலான தகவல்கள் வெறும் வதந்திகளே என அரசாங்கம் தெரிவித்துள்ளது. 19 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் அமைச்சரவையில் பேசக் கூட வில்லை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதம நீதியரசரின் பதவிக் காலத்தை வரையறுத்தல் மற்றும் காணி பொலிஸ் அதிகாரங்களில் திருத்தம் செய்தல் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி 19 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆளும் கட்சிக்குள் பாரியளவு முரண்பாடு காணப்படுவதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் சில கட்சி களுக்கு இடையில் சில முரண்பாடுகள் காணப்பட்ட போதிலும் அது கூட்டணிக்குள் பிளவை ஏற்படுத்தாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## அசாத் சாலி மீண்டும் வைத்தியசாலையில்

(கொழும்பு)

தடுப்புக் காவலிலிருக்கும் கொழும்பு மாநகர சபை முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலி மீண்டும் உடல்நிலை பாதிப்பு காரணமாக நேற்று முன்தினம் மாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் ஏற்கனவே கடந்த வெள்ளிக்கிழமை உடல்நலக் குறைவு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகளுக்கு பின்னர் கடந்த சனிக்கிழமை வைத்தியசாலையிலிருந்து வெளியேறியிருந்தார்.

எனினும் மீண்டும் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பெருக்கு/ ஆனைப்புளியமரம்

**Botanical Name-**
**Adansonia diguitata**
**Family-Bombacaceae**
**Engl-Baobab tree monkey bread**

மிகவும்பெரிய (60-70) அடி உயரமானவிருட்சமான மரம்.றோஸ் கலந்த சாம்பல் நிறப் பட்டையைக் கொண்டது.பளப்பளப்பான பட்டை. இலைகள் தனியிலை, எதிரிலை அடுக்கம். ஐந்து விரல் நீட்டமுடையவை. (pamate comund) இலைக்காம்பு 7-14 செ.மீ நீளமுடையது.

பெரிய பூக்கள், வெள்ளை நிறமானவை, பழங்கள் தடிப்பானவை.10-30 செ.மீ. நீளமானவை.இதன் பூக்களை ஐப்பசி தொடக்கம் மார்கழி வரையும் பழங்களை சித்திரை தொடக்கம்ஆவணிவரையும்அவதானிக்கலாம்.

வறண்ட பிரதேசங்களில் இதன் பரம்பலை அவதானிக்கலாம். யாழ்.மாவட்டத்தில் புங்குதீவு 4 ஆம் வட்டாரம் மற்றும் நெடுந்தீவிலும் இம்மரம் காணப்படுகின்றது.

புங்குடுதீவில் இம்மரம் காணப் படுகின்றது.

புங்குதீவில் காணப்படும் இம்மரத்திற்கு கிட்டத்தட்ட 400 வருடங்களுக்கு மேற்பட்ட வயதாக இருக்கும். விதைகள் மூலமும் வேர்க்கன்றுகள் மூலமும் இனவிருத்தி செய்யலாம்.

ஆனால் இதன் தாயகம் ஆபிரிக்காவாகும்.இம்மரத்தின் கீழ் பண்டைக்காலத்தில் கோராக் (Gorakh)என்ற ஒரு சந்நியாசி தனது சீடர்களுக்கு உபதேசம் செய்தாரென்றும் அதனால் இதற்கு கோராக் என்ற ஒரு பெயரும் வந்தது என்று கூறப்படுகின்றது.

**மருத்துவ பயன்கள்**

✦ இதனுடைய இலை, பட்டை, பழச்சதை, விதை ஆகிய அனைத்தும் மருத்துவ குணமுடையவை.

✦ இதன் பட்டையில்(Adansonin)எனும் வேதியற் பொருள் காணப்படுகின்றது.



இத்தாவரம் புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்திலுள்ள 400 வருடங்களுக்கு மேற்பட்ட பெருக்கு மரமாகும்

இது காய்ச்சலுக்கு பயன்படும்.

✦ இதன் பட்டைகளை சிறுசிறுதுண்டுகளாக நறுக்கி 1 பங்குக்கு 4 பங்கு நீர் வீட்டு 1/4 ஆக வற்றக்காய்ச்சி 30-60 மில்லி அதை காலை, மாலை கொடுக்க காய்ச்சல் தணியும்.

✦ இதன் இலைச்சாற்றில் சுக்கை சேர்த்தரைத்து கீல் வாயு, பறங்கிப் புண் முதலிய வற்றிற்கு பூசலாம். இதனுடைய இலைச்சாற்றை அல்லது இலைக்குடிநீரை நாட்பட்ட புண்களை கழுவ பயன்படுத்தலாம். இதன் இலைகளில் Tannin எனும் வேதியற் பொருள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

றொடேசியாவில் (Rhodesia) இதன் இலைகளை துவையல் அல்லது சம்பல் அல்லது கீரையாக பயன் படுத்துவார்கள்.

✦ இதன் இலைகளைக் கொண்டு தயாரிக்கும் குடிநீரால் வாய்கொப்பளித்துவர வாய்ப் புண் ஆறும்.

இதன் பழச்சதையில் (pulp) அதிகளவு உயிர்ச்சத்து C' காணப்படுகின்றது. இதன் புளிக்கு கழிச்சல், சீத பேதியை கட்டுப்படுத்தும் தன்மையுண்டு.

✦ காய்ச்சல் உள்ள நோயாளிகளும் இதன் பழத்தை தனித்தோ அல்லது பட்டை யுடன் சேர்த்தோ குடிநீர் தயாரித்து உண்டு வர காய்ச்சல், காய்ச்சலில் காணும் நீர் வேட்கை யும் தணியும்.

✦ இதனுடைய பழச்சாறு 200 மில்லியும்


திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

அத்திப் பழச்சாறு 200 மில்லி கலந்து பனை வெல்லம் 500 கிராம் சேர்த்து வாணலியில் இட்டு அடுப்பேற்றி மணம் வரும் பதம் வரை மணப்பாகு காய்ச்சி இறக்கி ஆறவிட்டு 1-2 மேசைக்கரண்டி அளவு எடுக்க உடலில் காணும் வெப்பத்தையும் எரிச்சலையும் தணித்து உடலிற்கு பலத்தைக் கொடுக்கும். இதனுடைய பருப்பை (விதைப் பருப்பு) அரைத்து 5 கிராம் அளவு 100 மில்லி மோரில் கலந்து குடித்தாலும் சீத பேதி, அவிசாரம் (கழிச்சல்) கட்டுப்படும். வாய்க்கசப்பு, புளிப் பேப்பம் வாய் நாற்றம் உடையவர்கள் இப்புளியின் ஒரு துண்டை வாயில் போட்டுமென்று வரலாம்.

✦மூட்டுக்களில் வீக்கம் வலி உள்ளவர்கள் இதன் இலைகளை அவித்து வலியுள்ள இடங்களுக்கு ஒத்தடம் கொடுத்த பின்பு அதையே வைத்துக்கட்டியும் விடலாம்.

குறிப்பு:- பல அரிய மருத்துவ தாவரங்கள் இலங்கையின் வடபகுதியில் காணப்படுகின்றன. ஆனால் புவி உருவவியல் ரீதியாக அவற்றை சரியாக இணங்கண்டு கொள்ளாமையும் பயன்படுத்தாமையே பல இத்தகைய அரிய இனத்தாவரங்கள் அழிவடைவதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடக்குத் தேர்தல் சொந்தச் செலவில் சூனியம் வைத்த கதைதான்

அண்மையில் வெலிஓயா நிகழ்வொன்றில் அறிவித்தபடி, வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை, வரும் செப்டெம்பர் மாதம் நடத்துவதோ அல்லது நடத்தாது விடுவதோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கடியாகவே அமையப்போகிறது.

வடக்கு மாகாணசபைக்கு செப்டெம்பரில் தேர்தலை நடத்தப்போவதாக ஜனாதிபதி அறிவித்த பின்னர், எழுந்துள்ள எதிர்ப்புகள், இந்தத் தேர்தல் இலகுவானதொன்றாக இருக்கப்போவதில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

தேர்தலுக்கு முன்னதாகவே தொடங்கிவிட்ட தமிழ் அரசியல் கட்சிகள் மீதான தாக்குதல்களும், தமிழ் ஊடகங்கள் மீதான தாக்குதல்களும் வடக்கில் சுமுகமான- சுதந்திரமான சூழலில் தேர்தல் நடக்குமா என்ற ஐயம் எழுப்பியுள்ளது.

இந்தச் சூழலில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலுக்கு எழுந்து வரும் எதிர்ப்பு, அரசியல் ரீதியான கொந்தளிப்பை இலங்கையில் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு ஒன்றை உருவாக்கலாம் என்ற கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தேசிய சுதந்திர முன்னணி மேதினப் பேரணியில், உரையாற்றிய அமைச்சர் விமல் வீரவன்ச, காணி, பொலிஸ் அதிகாரங்கள் பறிக்கப்படாமல் வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்படக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறு அரசியலமைப்பைத் திருத்தாமல் தேர்தலை நடத்தமுற்பட்டால், தமது கட்சி அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் என்றும் அவர் மிரட்டியுள்ளார். இதுபோலவே அரசாங்கத்தின் இன்னொரு கூட்டணிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மாகாணசபைகளிடம் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்கும் அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டுவரவேண்டும் என்றும், வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட சிங்களவர்களை மீளக் குடியமர்த்தாமல் தேர்தலை நடத்தக்கூடாது என்றும் ஜாதிக ஹெல உறுமய கூறியுள்ளது.

தேசப்பற்று தேசிய இயக்கமோ, வடக்கில் வாழ்ந்து வந்த 21 ஆயிரம் சிங்களக் குடும்பங்களை மீளக்குடியேற்றாமல் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு எதிராக, வழக்குப் பதிவு செய்யப்போவதாக மிரட்டியுள்ளது.

அரசாங்கத்துக்கு உள்ளேயும், வெளியேயும் இருக்கின்ற சிங்கள, பௌத்த கடும்போக்குவாத அரசியல் கட்சிகள் அமைப்புகள் எல்லாமே வடக்கு மாகாணசபைக்குத் தேர்தல் நடத்தப்படுவதை விரும்பவில்லை என்பதையே இந்த எதிர்ப்புகளில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு எதிரான இந்த எதிர்ப்புணர்வு நாளடைவில் இன்னும் தீவிரமடையலாம். அரசாங்கத்துக்கு அது பெருந்தலைவலியாகும் என்பதால்தான், இந்தத் தேர்தல் நடக்குமா என்ற கேள்வி இன்னமும் பலரால் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது.

விமல்வீரவன்ஸவோ அல்லது ஜாதிக ஹெல உறுமயவோ விடுக்கும் எச்சரிக்கைகளை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. அதுவும் வடக்கு, கிழக்கு விவகாரத்தில், அரசாங்கத் தரப்பை கடும்போக்கு நிலைப்பாடுகளை எடுக்க வைத்த பல்வேறு சந்தர்ப்பங்களின் பின்புலத்தில் இந்தக் கட்சிகளே இருந்துள்ளன.

விடுதலைப்புலிகளுடனான போர் நிறுத்தத்துக்கு, பேச்சுக்களுக்கு எதிரான போராட்டங்களை நடத்தியதன் மூலம், போரை நோக்கி நாட்டத் தள்ளிச் சென்றதிலும்சரி, வடக்கு, கிழக்கு மகாணங்களைப் பிரிப்பதற்கான் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்ததிலும் சரி இந்த கட்சிகளின் பங்கு முக்கியமானது.

எனவே, வடக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக இந்தக் கட்சிகள் விடுக்கின்ற எச்சரிக்கைகளை மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தினால் இலகுவாக புறந்தள்ளி விடமுடியாது.

விமல்வீரவன்ஸவோ, சம்பிக்க ரணவக்கவோ விடுகின்ற எச்சரிக்கைள் ஒரு புறத்தில் இருக்க காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணசபைகளிடம் விட்டுவைக்க அரசாங்கமும் கூடத் தயாராக இல்லை என்பது உண்மை.

ஏற்கனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாது என்ற கருத்தை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அரசாங்கத்தில் முக்கியமானவர்களான பசில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ போன்றவர்களும் வெளிப் படுத்தியுள்ளனர். இந்நிலையில் வடக்கு மாகாண சபைக்குத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக, இந்த அதிகாரங்களைப் பறித்துக்கொள்ளும் வகையிலான 19வது அரசியல் அமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவர அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆனால், வெளிப்படையாக 13வது திருத்தத்தில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறிக்கின்ற வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தால் அதற்கு வெளியே எதிர்ப்பு எழும்பும்.

இதனைத் தவிர்ப்பதற்காகவே, ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 5 ஆண்டுகளாக குறைக்கவும், தலைமை நீதியரசரின் பதவிக்காலத்தை 5 ஆண்டுகளாக வரையறுக்கவும் இந்தத் திருத்தத்தில் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தைக் குறைப்பது என்ற இனிப்புப் பூசப்பட்ட மாத்திரைக்குள் தான் மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படவுள்ளன. இந்த நிலையில், இந்த அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றி மாகாணசபைகளின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு சிங்கள பௌத்த தேசியவாதிகள் ஆதரவு அரசாங்கத்துக்கு இருந்தாலும், வெளியுலகில் எதிர்பார்ப்புகள் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

குறிப்பாக இந்தியா இந்த விடயத்தில் என்ன செய்யப்போகிறது என்ற கேள்வி இருக்கிறது.

ஏனென்றால் 13 ஆவது அரசியல் அமைப்புத்திருத்தத்தின்மூலம் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதற்குக் காரணமே இந்தியாதான். 1987 ஆம் ஆண்டு இந்திய- இலங்கை அமைதி உடன்பாட்டின் மூலம் மாகாணசபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதும் இந்தியாதான்.

இப்போதும்கூட, வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தவேண்டும் என்ற வாக்குறுதியை பெற்ற பின்னர்தான் கொமன்வெல்த் மாநாட்டு விவகாரத்தில் எழுந்த நெருக்கடியில் இருந்து இலங்கையைக் காப்பாற்றியுள்ளது இந்தியா.

இந்த நிலையில், மாகாணங்களின் பொலிஸ், காணி அதிகாரங்களைப் பறித்த பின்னர்தான், தேர்தலை நடத்தப்போவதாக, திடீரென அரசாங்கம் அறிவித்தால், இந்தியாவின் எதிர்வினை எத்தகையதாக இருக்கும் என்பது கேள்விக்குரியது.

சிலவேளைகளில் இந்தியா அதனைக் கண்டுகொள்ளாமல் இருந்துவிடலாம்.

சிலவேளைகளில், வெளிப்படையாக இல்லாவிட்டாலும் இராஜதந்திரரீதியாக அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம். இந்த விடயத்தில் இலங்கை அரசின் முடிவை இந்தியா ஏற்கமறுத்தால், மீண்டும் கொமன்வெல்த் மாநாட்டுவிடயத்தில் இலங்கை நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம்.

அதேவேளை, காணி, பொலிஸ் அதிகாரங்களைத் தவிர்க்கின்ற இலங்கை அரசின் எந்தவொரு முயற்சிக்கும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் இந்தியா இணங்கிப்போகுமானால், அது இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் இந்தியாவுக்கு ஏற்பட்ட வரலாற்றுத் தோல்வியாகவே அமையும்.

ஏனென்றால், இப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தம் மூலமே தீர்வுகாணப்படவேண்டும் என்று இப்போதும் வலியுறுத்திவருகிறது இந்தியா.

1987 இல் ராஜீவ்காந்தியால் முன்மொழியப்பட்ட திட்டத்தின்படி, மாகாணசபைகளுக்குக் கொடுக்கப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்கள் இலங்கை அரசினால் பிடிங்கிக்கொள்ளப்படுவதை இந்தியா வேடிக்கை பார்க்குமேயானால், அது இந்திய வெளிவிவகாரக் கொள்கையின் மிகப்பெரிய தோல்வியாகவே கருதப்படும்.

அதேவேளை, இந்தியாவினதோ, அமெரிக்காவினதோ சொல்லைக்கேட்டு மாகாணங்களின் காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறிக்கின்ற முயற்சிகளை இலங்கை அரசாங்கம் கைவிட்டுவிடும் என்று எதிர்பார்க்கமுடியாது.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், வெளிநாட்டு அழுத்தங்களைவிட, சிங்கள, பௌத்த மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதில்தான் அதிக கவனம் செலுத்திவருகிறது. விமல்வீரவன்ஸவும், சம்பிக்க ரணவக்கவும் கிளப்பிவிட்டுள்ள பிரச்சினை, சிங்கள மக்களைக்கிளர்ந்தெழச் செய்துவிடும் என்ற ஒரு காரணத்தை வைத்துக்கொண்டே அரசாங்கத்தினால் இலகுவாக அரசியல் அமைப்புத்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

அதுமட்டுமன்றி, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்படும் சட்டத்தை எந்தவொரு ஜனநாயக உலகமும் ஏற்றேயாகவேண்டும். பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அமெரிக்கா ஏற்கவில்லை.

ஆனால், அரசாங்கம் அது பெரும்பான்மை உறுப்பினர்களின் முடிவு என்று நியாயம் கூறியது.

நாடாளுமன்றத்தில் 3இல் 2 பெரும்பான்மை பலம் அரசாங்கத்தின் வசம் உள்ளநிலையில், 19 ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளின் காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறிப்பதுடன் மட்டும் நின்றுவிடா மல், அதற்கப்பால் சென்று மாகாணசபைகளையே இல்லாமல் செய்துவிடவும் முடியும். ஆனால் ஒன்று, சர்வதேச அரங்கில் இந்தியாவுடனான உறவில் இலங்கை நெருக்கடிகளைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்படும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இப்போது வடக்குமாகாணசபைத் தேர்தலை நடத்துவது என்ற முடிவு இருந்தாலும், அங்கிருந்து இடம்பெயர்ந்த சிங்களமக்களை குடியேற்றாமல் தேர்தலை நடத்தக்கூடாது என்ற நீதிமன்றத் தீர்ப்பு ஒன்று கோரப்படுமானால், நிச்சயம் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவரும்.

இப்போதைய நிலையில் அரசாங்கம் வடக்குமாகாணசபைத் தேர்தலை நடத்தாமற்போனால் பாரிய சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும். ஏனென்றால் வரும் செப்ரெம்பரில் அரசாங்கத்துக்கு பல்வேறு காலக்கெடுக்கள் உள்ளன. பல்வேறு தடைகளைத் தாண்டியாக வேண்டியுள்ளது.

வடக்குமாகாணசபைக்கான தேர்தல் முதலாவது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ள இடைக்கால அறிக்கை இரண்டாவது. கொமன்வெல்த் அமைச்சரவைக்கூட்டம் மூன்றாவது.

இந்த மூன்று தடைகளையும் வெற்றிகரமாகத் தாண்டி ஓடினாற்றான், அரசாங்கத்தினால், வரும் நவம்பரில் கொமன்வெல்த் மாநாட்டை சிக்கலின்றி நடத்தமுடியும். இல்லையேல் கொமன்வெல்த் மாநாட்டைக் கொழும்பில் நடத்தினாலும்கூட, நெருக்கடிகள், அழுத்தங்கள், விமர்சனங்களைத்தான் அதிகளவில் சந்திக்கவேண்டிவரும். சுருங்கச்சொன்னால் சொந்தச்செலவில் சூனியம் வைத்துக்கொண்டதாகிவிடும்.

கே.சஞ்சயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் காணி அபகரிப்பு பரிந்துரைகளுக்கு முரணானது

## தேசிய சமாதான பேரவை வலியுறுத்து

(கொழும்பு)

**வடக்கில் தமிழர்களின் காணிகளை கையகப்படுத்துவது தொடர்பான அரசாங்கத்தின் திட்டம் அவசர மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியுள்ளது.**

அத்துடன் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின்பரிந்துரைகளுக்குஅமைய அரசாங்கம் செயற்பட வேண்டிய தன் முக்கியத்துவத்தையும் குறித்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்கில் தமிழர்களின் காணிகளைக் கையகப்படுத்தும் அரசாங்கத்தின்செயற்பாடுகள் குறித்துதேசிய சமாதான பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அக்கரைவெளி, வேதமடு, கமங்குளம், அமையங்குளம் ஆகிய இடங்களில் மக்கள் குடியமர்த்தப்படுகின்றனர் என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளைக் கைப்பற்றும் அரசாங்கத்தின் திட்டம், பாதிக்கப்பட்ட மக்களின் மத்தியில் அச்சத்தையும் கிளர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் விரைவில் அவர்களின் சொந்த இடங்களிலேயே மீள்குடியமர்த்தப்படுவர் என்று 2009 ஆம் ஆண்டில் போர் முடிவடைந்தவுடனே அரசாங்கம் கூறியிருந்தது.

இதன் அடிப்படையில் தனியார் காணிகள் அவற்றின் சொந்தக்காரர்களிடம் வழங்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் ஒன்றாகும்.

பொதுத் தேவைக்காக நிலத்தைக் கைப்பற்ற அரசாங்கம் விரும்பினால் பாதிக்கப்படும் மக்களுடனும் அவர்களின் பிரதிநிதிகளுடனும் பேசுவதுதான் நாட்டில் உள்ள பொதுவான நடைமுறையாகும். அத்தோடு நீதித்துறையின் ஊடான சட்ட ஏற்பாடுகளுக்கும் அவகாசம் வழங்கப்படும். ஆனால், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அரசாங்கத்தின் செயற்பாடுகள் எதிரானதாகவுள்ளன.

அத்துடன் வடக்கின் குடியியல் நிர்வாகம் இராணுவப் படைத்தரப்பின் நிர்வாகத்தில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும் இலங்கைப் படைத்தரப்பினரால். கைப்பற்றப்பட்டுள்ள தனியாரின் காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஆகவே, வடக்கில் பொதுமக்களின் காணியைக் கைப்பற்றும் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் நாம் கேட்டுக் கொள்கிறோம் என்று இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# விசாரணைகள் முடிவுற்றதும் அசாத் சாலி விடுவிக்கப்படுவார்

## தே.பா.ம.நிலையப் பணிப்பாளர்

(கொழும்பு)

அசாத் சாலி உணவு உட்கொள்ள ஆரம்பித்திருப்பதால் பிரச்சினை எதுவும் இல்லாதிருப்பதாக தேசிய பாதுகாப்பு மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

அசாத் சாலிக்கு எதிராக கிடைக்கப் பெற்றுள்ள 18 முறைப்பாடுகள் விசாரணை செய்து முடிக்கப்பட்டதும் அவர் விடுதலை செய்யப்படுவார் என தேசிய பாதுகாப்பு மத்திய நிலையத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தமிழ்நாட்டுக்குச் சென்று இலங்கைக்கு எதிராக ஜூனியர் விகடன் ஊடகத்திற்கு வெளியிட்ட கருத்து தொடர்பில் அசாத் சாலியிடம் விசாரணை மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

ஒரு நாடு தொடர்பில் இன்னொரு நாட்டிற்குச் சென்று கருத்து வெளியிடுவது நியாயமான ஒன்று அல்ல எனவும் முஸ்லிம்கள், நாட்டைக் காட்டிக் கொடுக்கும் வகையில் கருத்து வெளியிடுவர் என்று எங்கும் சொல்லப்படவில்லை எனவும் ஹுலுகல்ல தெரிவித்தார்.

சர்வதேச மட்டத்தில் அசாத் சாலி வெளியிட்டுள்ள அந்தக் கருத்து உள்ளிட்ட 18 முறைப்பாடுகள் தொடர்பில் குற்றத் தடுப்புப் பிரிவினர் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அசாத் சாலிக்கு எதிராக நிதி மோசடிக் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளதெனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# இலங்கை பணிப்பெண்ணுக்கு லெபனானில் நடந்த கொடூரம்

## துண்டு துண்டாக வெட்டிக்கொலை

லெபனானுக்கு வீட்டுப் பணிப் பெண்ணாகச் சென்ற இலங்கைப் பெண் ஒருவர் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இலங்கைப் பணிப் பெண்ணின் சடலம் நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கைகள், கால்கள், தலை, உடல் என தனித்தனியாக வெட்டப்பட்ட நிலையில் இச்சடலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மஹாவெள பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதான டிலிகா மதுசானி என்ற பெண்ணே இவ்வாறு கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

இப் பெண்ணின் சடலம் குப்பை கூழமொன்றிலிருந்து கடந்த 26 ஆம் திகதி மீட்கப்பட்டிருந்தது.

இப்பெண் ஏற்கனவே பல தடவைகள் மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப்பெண்ணாக கடமையாற்றியுள்ளார் எனவும் தெரியவருவதோடு, இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (அ)

# சிறை அதிகாரிகளுக்கும் விசேட கொடுப்பனவு

## *அமைச்சர் கஜதீர வலியுறுத்தல்*

பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அனைத்து விசேட கொடுப்பனவுகளும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் வழங்கப்பட வேண்டுமென சிறைச்சாலை புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைக்கின்ற கஷ்ட பிரதேச கொடுப்பனவு, ஆபத்து கொடுப்பனவு, சீருடைக் கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு எனப் பல கொடுப்பனவுகள் சிறைச் சாலை அதிகாரிகளுக்கும் கிடைக்க வேண்டுமென அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன்.

ஆங்கிலேயர் காலத்தில் பொலிஸ் பரிசோதக ஆளுநருக்கு கீழேயே இந்த இரண்டு திணைக்களங்களும் இயங்கி வந்தன. தற்போது பல தசாப்த காலமாக சிறைச்சாலைத் திணைக்களம் தனித் திணைக்களமாக இயங்கிவருவதுடன் பொலிஸ் திணைக்கள மட்டத்திற்கு உயர்த்தப்பட்டும் உள்ளன.

அத்துடன் இத்திணைக்களத்தில் 5 ஆயிரம் அதிகாரிகள் சேவையில் உள்ளனர். இவர்கள் 27 ஆயிரம் சிறைக்கைத்திகளை பேறாமல்வை செய்து நெறிப்படுத்தி வருகின்றனர் என்றார். (அ-2)




★ *1450* - லண்டனில் கென்ட் நகரில் ஆறாம் ஹென்றி மன்னனுக்கெதிராக ஜாக் கேட் என்பவன் தலைமையில் கிளர்ச்சி இடம்பெற்றது.

★ *1821* - கிரேக்க விடுதலைப் போர்: கிரேக்கர்கள் துருக்கியர்களை கிராவியா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தனர்.

★ *1861*-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைநகராக வேர்ஜீனியாவின் ரிச்மண்ட் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

★ *1886* - ஜோன் பெம்பர்ட்டன் கொக்கக்கோலா எனப் பின்னர் பெயரிடப்பட்ட மென்பானத்தைக் கண்டுபிடித்தார்.

★ *1902*- கரிபியன், மார்டீனிக் தீவில் பெலே எரிமலை வெடித்ததில் 30 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★ *1914*- பராமவுண்ட் பிக்சர்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

★ *1933*- மகாத்மா காந்தி ஹரிஜன் மக்களின் நலனுக்காக 21-நாட்கள் உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.

★ *1942*- இரண்டாம் உலகப் போர்: கொக்கோஸ் தீவுகளில் நிலை கொண்டிருந்த பிரித்தானிய இலங்கை இராணுவப் பிரிவை சேர்ந்த இராணுவத்தினர் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சி அடக்கப்பட்டு மூவர் தூக்கிலிடப்பட்டனர்.

★ *1945* - அல்ஜீரியாவின் சேட்டிஃப் என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான அல்ஜீரியர்கள் பிரெஞ்சுப் படைகளினால் கொல்லப்பட்டனர்.

★ *1945* - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்தனர்.

★ *1984* - லாஸ் ஏஞ்சலஸ் ஒலிம்பிக் விளையாட்டுகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.

★ *2007* - புதிய வட அயர்லாந்து உயர் சபை அமைக்கப்பட்டது.

**பிறப்புக்கள்**

★ *1828* - ஹென்றி டியூனாண்ட், செஞ்சிலுவைச் சங்கத்தை நிறுவியவர் (இ. 1910)

★ *1916*-சுவாமி சின்மயானந்தா, இந்திய ஆனமீகவாதி (இ. 1993)

**இறப்புகள்**

★ *1947* - ரெர்பேர்ட் ஹோர்விட்ஸ், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★ *1951*-மு. நல்லதம்பி, ஈழத்துப் புலவர்

சிறப்பு நாள்

★ உலக செஞ்சிலுவை தினம்

**ஹென்றி டியூனாண்ட்**

ஜீன் ஹென்றி டியூனாண்ட் 1828 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி பிறந்தார். சுவிஸ் நாட்டவரான இவரே செஞ்சிலுவைச் சங்கத்தைத் நிறுவியவர். 1863 ஆம் ஆண்டில் போரில் காயமடைந்தவர்களுக்கு உதவ செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தார். 1901 ஆம் ஆண்டில் அமை திக்கான முதல் நோபல் பரிசை இன்னொருவருடன் பகிர்ந்து பெற்றுக் கொண்டார். இவ்வாறு பாரிய சமூகத் தொண்டை ஆரம்பித்து வைத்த இவர் 1910 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி உயிர்நீத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமுறியது எரிமலை



பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர மணிலாவில் இருந்து 330 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மயோன் எரிமலை நேற்று திடீரென வெடித்து புகையையும் சாம்பலையும் வெளியேற்றியது. அப்போது 500 மீற்றர் உயரம் வரை அடர்த்தியான சாம்பல் வெளியேறியதாக நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

அந்த நேரத்தில் எரிமலையை சுற்றிப்பார்க்க சென்ற 3 சுற்றுலா பயணிகள் இறந்துவிட்டதாகவும், மேலும் 4 பேர் படுகாயமடைந்து இருப்பதாகவும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். எரிமலை வெடித்த நேரத்தில் அவர்கள் அந்த மலைச் சரிவில் நின்றதாக கூறப்படுகிறது.

மயோன் எரிமலை சரியான கூம்பு வடிவ தோற்றத்தை கொண்டுள்ளதால் அந்த எரிமலையை காண சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வருகிறார்கள்.

மிக ஆக்ரோசமான இந்த எரிமலை இது வரை 48 முறை வெடித்து சிதறியுள்ளது. இதில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

### எனது கட்சி ஆட்சிக்கு வந்தால்

# நான்தான் பாக்.இன் இராணுவத் தளபதி

### – சூளுரைக்கிறார் நவாஷ் ஷெரிப்



பாகிஸ்தானில் மீண்டும் எனது தலைமையிலான கட்சி ஆட்சி அமைத்தால் நான் ராணுவ தலைமை தளபதியாக பதவியேற்பேன் என பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கூறியுள்ளார்..

பாகிஸ்தானில் எதிர்வரும் 11ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறுகிறது. இதில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம்லீக் கட்சியும் போட்டியிடுகிறது.

இந்நிலையில் அவர் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், பாகிஸ்தான் மக்களுக்கு நன்றாக தெரியுழ் நான் பிரதமராக இருந்த வரை நாட்டில் கூட்டாட்சி தத்துவத்தின் படி மக்களாட்சி முறை சிறப்பாக இருந்தது. மீண்டும் எனது தலைமையிலான ஆட்சி அமையப்போவது உறுதி. எனது கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், நானே பாகிஸ்தானின் இராணுவத்தினை கட்டுப்பாட்டில் கொண்டுவந்து இராணுவ தலைமை தளபதியாக பொறுபேற்பேன். தற்போது உள்ள இராணுவ தலைமை தளபதி அஷ் தக்பர்வேஷ் கயானி, நவம்பரில் ஓய்வு பெறுகிறார். அவருக்கு அடுத்தபடியாக அப்பதவியை வகிப்பேன் என்றார்.

### இந்தியா - பாகிஸ்தான் எல்லையில்

# மீண்டும் சமர்

ஜம்மு காஷ்மீர் அருகே எல்லைக் கோட்டில் இந்தியா - பாகிஸ்தான் இராணுவத்திற்கு இடையே நேற்று கடுமையான துப்பாக்கிச் சண்டை நிகழ்ந்துள்ளது. சம்பா மாவட்டத்தில் ஏற்பட்ட இந்த துப்பாக்கிச் சண்டையால் இரு நாட்டு எல்லை பகுதிகளில் பதற்றம் நிலவுகிறது. இந்திய எல்லைக்குள் சிலர் ஊடுருவ முயன்றதை அடுத்து, அவர்களை எல்லை பாதுகாப்பு படையினர் எச்சரிததனர். எனினும் அவர்கள் எல்லைக்குள் அத்துமீறி முயற்சி செய்தபோது, எல்லை பாதுகாப்பு படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தி அவர்களை விரட்டினர்.

ஆனால் மறுமுனையில் ஊடுருவலுக்கு உதவியாக பாகிஸ்தான் இராணுவத்தினர் இந்திய நிலைகளை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனையடுத்து இந்திய இராணுவத்தினர் பதிலடி கொடுக்க இரு தரப்புக்கும் இடையே 30 நிமிடத்திற்கும் மேலாக கடுமையான துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இந்த துப்பாக்கிச் சண்டையில் ஏற்பட்டுள்ள உயிரிழப்பு குறித்து எந்த தகவலும் வெளியாகவில்லை.

கடந்த மாதம் சீன இராணுவம் இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து பல நாட்களாக தங்கியிருந்தனர். இதனால் இந்திய - சீன உறவில் விரிசல் ஏற்பட அண்மையில் சீன இராணுவத்தினர் இந்திய எல்லையில் இருந்து வெளியேறிய நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## நினைவுதின பேரணி ரஷ்யாவில்



ரஷ்யாவில் கடந்த வருடம் ஜனாதிபதி புடின் மூன்றாவது முறையாக பதவி ஏற்பதற்கு முன் மாஸ்கோவில் எதிர்க்கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் பொலிசாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கலகம் ஏற்பட்டது.

இதில் பலர் மீது குற்றச்சாட்டுகள் பதிவாகியுள்ளன. குற்றம் நிரூபிக்கப்பட்டு சிலர் தண்டிக்கப்பட்டனர். அப்போது நடந்த போராட்டத்தின்போது ஒருவர் உயிரிழந்தார். அதன் நினைவு தின பேரணி நேற்று முன்தினம் நடை பெற்றது. இதில். பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு நினைவு தினத்தை அனுஷ்டித்தனர்.

## தேவாலயத்தில் குண்டு வெடிப்பு



தான்சானியா நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள அருஷா என்ற நகரத்தில், புதிய கத்தோலிக்க தேவாலயம் ஒன்று திறக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சிக்கு, வத்திக்கான் தூதரான பிரான்சிஸ்கோ மார்ட்டிசெல்லோ தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில் திடீரென குண்டு வெடித்தது. இதில் வத்திக்கான் தூதர உயிர் தப்பினார். பெண் ஒருவர் பலியானார். 57 பேருக்கும் மேல் காயமடைந்தனர். வெடிவிபத்து நடந்ததை உறுதி செய்த பொலிஸ் தகவல் அதிகாரி, அட்வேரா சென்சோ, அது என்னமாதிரியான குண்டு என்று தெரியவில்லை என்று கூறினார். ஆயினும், நடந்தது வெடிவிபத்து என்று உறுதி செய்யப்பட்டால், இனக்கலவர பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கும் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் அதன் தீவிரத்தை இன்னும் தூண்டிவிடுவதற்காக இது நடத்தப்பட்டிருக்கும் என்று சென்சோ தெரிவித்துள்ளார்.

இந்த வருட ஆரம்பத்தில், முஸ்லிம் மக்கள் அதிகம் வாழும் சன்சிபார் தீவுகளில், இரண்டு கிறிஸ்தவத் தலைவர்கள் கொல்லப்பட்டதை அடுத்து, முஸ்லிம் தலைவர்கள் மீதும், மசூதிகள் மீதும் தாக்குதல்கள் நடந்து வருகின்றன. அருஷா நகரம் கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் பகுதியான கிளிமஞ்சரோ மலைபகுதியை ஒட்டி அமைந்துள்ளதால், இந்தத் தாக்குதல் முக்கியத்துவம் பெறுகின்றது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாக்.தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் குண்டுவெடிப்பு

பாகிஸ்தானில் தேர்தல் பிரசார கூட்டத்தில் நிகழ்ந்த குண்டு வெடிபபில் 15 பேர் உயிரிழந்தனர். 70 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பழங்குடியின பகுதியான குர்ராமில் உள்ள மதரஸாவில் ஜம்இயத்துல் உலமா-இ-இஸ்லாம்-ஃபாசல் கட்சியின் பிரசார கூட்டம் நேற்று நடைபெற்றது. அப்போது குண்டு வெடித்ததில் 15 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர்.

மேடையில் இருந்த ஜம்இயத் கட்சித் தலைவர் முனீர் கான், கட்சியின் வேட்பாளர் உள்ளிட்ட கட்சியினர் பலர் லேசான காயங்களுடன் உயிர் தப்பினர். காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

பாகிஸ்தானில் மே 11இல் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் அறிவிப்புக்குப் பின் பயங்கரவாதிகள் நிகழ்த்தியுள்ள மிகப்பெரிய தாக்குதல் இது.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜர்தாரி உள்ளிட்ட தலைவர்கள் பலர் இந்த சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

### சிறிய குடும்பத்தின் சிக்கனம்



தமிழகத்தின் மெரினா வீதியில் ஒரு மோட்டார் சைக்கிளில் கணவன், [illegible] பயணம் [illegible] எதிர் காலத்தில் வீதிகளில் களமிறங்கினால் ......?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடகொரிய எல்லையில் இருந்து பின்நகர்கின்றன ஏவுகணைகள்



வடகொரியா - தென்கொரியா இடையே சமீபத்தில் போர் மேகம் சூழ்ந்திருந்தது. தென்கொரியா, அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப் போவதாகவும் வடகொரியாக மிரட்டியிருந்தது. அதற்கான தயார்ப்படுத்தல்களையும் மேற்கொண்டு ஏவுகணைகளையும் எல்லைகளை நோக்கி நகர்த்தியது.


தற்போது தாக்குதலுக்கு தயாராக வைத்திருந்த இரண்டு ஏவுகணைகளையும் வடகொரியா விலக்கியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் ஆசியாவின் வடக்குப் பகுதியில் நிலவிய பதற்றம் குறைந்துள்ளது.

வடகொரிய அரசு சென்ற முறை, அணு ஆயுதப்போர் குறித்து பிரச்சினைகளை ஏற்படுத்தியது போன்று இந்த முறை 3,500 மைல்கள் தூரம வரை சென்று வெடிக்கக்கூடிய "முசுடன்" ஏவுகணைகளை ஏவலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால் தற்போது அமெரிக்காவின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் வடகொரியா ஏவுகணைகளை பின் நகர்த்தியுள்ளது என்றும், அதனால் உடனடித் தாக்குதல் எதுவும் இருக்க வாய்ப்பில்லை என்றும் தெரிவித்துள்ளார். இதுகுறித்து வடகொரியா தெளிவான முடிவுக்கு வரவேண்டும் என்றும் அதிகாரிகள் கூறினர்.

ஆனால் இதுவரை வடகொரியத் ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின நடவடிக்கை என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை.

# நேரிய பாதையில் பயணிக்க வழிகாட்டும் யாழ்.சின்மயாமிஷன்



சுவாமி சின்மயானந்தரின் அவதார தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

தற்கால சூழலில் மதமாற்றம் என்ற பீடை இந்து மதத்தை கருவறுத்து வருகின்ற பின்னணியில் இந்து மதத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பல நிறுவனங்கள் எதுவித அக்கறையுமின்றி இருக்கின்ற நிலையில் சின்மயா மிஷன் என்ற ஆன்மீக நிலையம் மக்களின் குறைநிறைகளை தன்னிலை சார்ந்து புரிந்து கொண்டு காலத்திற்கேற்ற வகையில் செயற்பட்டு வருவதனால் பிற மதப் பிரசாரங்களின் வீச்சுக்கள் அடிபட்டுப் போய் விடுகின்றன.

உலகில் பின்பற்றி வருகின்ற சமயங்கள் யாவுமே மானிடங்களை நல்வழிப்படுத்தி ஒன்றிணைக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டு வருகின்றன. ஆனால் ஒரு சில மதப்பிரிவினர் சமயங்கள் போதிக்கும் நன்னெறிகளை புறமொதுக்கி மதத் தீவிரவாதச் செயல்களுக்கு முன்னுரிமை கொடுக்க முற்படுகின்றனர்.

அச்செயற்பாடுகளில் ஒன்றாகவே மதமாற்றமும் பார்க்கப்படுகின்றது. யாழ். குடாநாட்டில் வேற்று மதப் பிரசாரங்களும் அதற்கூடான மதமாற்றங்களும் கனகச்சிதமாக நடந்தேறும் சூழமையில் இந்துமதம் என்கின்ற புராதன மெய்ச்சமயம் காவு கொள்ளப்பட்டு வருவது வேதனையிலும் வேதனை. எத்தனையோ இந்துக்கள் வேற்று மதப் பிரசாரங்களால் உந்தப்பட்டு தாம் பின்பற்றி வந்த இந்து மதத்தினின்றும் விலகி வேற்று மதங்களில் இணைந்து வருவது ஏற்றுக் கொள்ளமுடியாத குற்றமாகும்.

இத்தகைய குற்றங்கள் இம்மண்ணில் நிகழ்வதைக் கண்டும் காணாதது போல பல இந்து அமைப்புக்கள், ஒன்றியங்கள், மகா சபைகள் (என்பவை) எதுவித நடவடிக்கைகளில் ஈடுபாட்டுடன் முழு மூச்சுடன் ஈடுபட்டதாக தெரியவில்லை.

இருந்தும் சின்மயாமிஷன் நிறுவனத்தின் மக்கள் மயப்பட்ட சேவைகள், செயற்பாடுகள் யாவும் இந்து மதத்தின் தொன்மையை நிலைநிறுத்திக் கொள்வதற்கு ஓரளவாவது உதவுகின்றது எனலாம்.

இந்து மதம் கூறுகின்ற உண்மைத் தன்மையான கருத்துக்களை முழுமையாக உள்வாங்காமல் இன்றைய தலைமுறை வழி தவறி சென்று கொண்டிருக்கையில் இந்து மதம் என்றால் என்ன? அதனை பின்பற்ற வேண்டியதன் அவசியம் என்ன? அதன் அடிப்படை தத்துவங்கள் யாவை? என்பவற்றை தற்கால அறிவியல் சூழலுக்கேற்ற வகையில் தர்க்க ரீதியான முறையில் விளக்கி நாம் ஒவ்வொருவரும் இந்துவாக இருப்பதில் பெருமைப்பட வேண்டும் என்ற உயர் இலட்சியத்தை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்ற சின்மயாமிஷன் நிலையத்தின் செயற்பாடுகள் காலம் கடந்து தேவையறிந்து சேவையாற்றி வருவது பாராட்டுதல்களுக்குரியன.

இந்நிலையத்தின் அறிமுகமான சிறு விளக்கத்தை இங்கு பதிவு செய்வது பொருத்துடையது. இந்தியாவிலுள்ள பெங்களூரில் தலைமை ஆச்சிரமமாக கொண்டு இயங்கி வருகின்ற இந்நிறுவனம் உலகில் 200க்கும் அதிகமான நாடுகளில் கிளைகளை நிறுவி ஆன்மீக பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் ஸ்தாபகர் பக்தர் பூஜ்யகுரு தேவரான சுவாமி சின்மயானந்தர்.

இவரின் சமாதி நிலையையடுத்து தற்போது சுவாமி தேஜோமயானந்தர் ஆச்சிரம பொறுப்பை ஏற்று வழிநடத்தி வருகின்றார்.

இலங்கையில் கொழும்பு, மலையகம், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தில் கிளைகளை விஸ்தரித்துள்ளது. இவ்வாச்சிரமம் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அமுல்படுத்தி செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையில் அதன் வதிவிட ஆச்சாரியாராக விளங்குகின்ற பிரமச்சாரி ஜாக்கிர சைதன்ய சுவாமிகள் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் தனது இடையறாத சேவையை குருவால் மேற்கொண்டு வருவதை எமக்கு கிடைத்த பெரும் பேறாகவே கருத வேண்டும்.

இவர் இளைஞனாக இருந்தாலும் இவரிடமிருக்கும் பரந்த அறிவும் இந்துமத கோட்பாடுகள், தத்துவங்கள் மீதுள்ள உயர்ஞானச் செழுமையும் மனங்களை வசீகரிக்கும் பேச்சும், தன்னலம் கருதாத சேவையும் அவரை தெய்வீக நிலைக்கு உயர்த்தி நிற்கின்றது.

இந்துமதம் காலம் கடந்து நிற்கும் ஒரு அற்புதமான கருவூலம். எண்ணற்ற தத்துவங்களும் அறிவியல் விசாரங்களும் உண்மைகளும் அற்புதங்களும் நிறைந்து கிடக்கின்ற பொக்கிஷத்தை மக்கள் மத்தியில் இலகுவான முறையில் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற ஆசை அவரில் விஞ்சி நிற்பதை உணர முடிகின்றது.

தற்காலத்தில் இந்துமதத்தின் செல்வாக்கு படிப்படியாக குறைந்து வருகின்ற நிலையில் இன்றைய இளைய தலைமுறை இந்துமதம் காட்டும் அறவழியில் செல்லாது அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. அத்துடன் மதமாற்றம் என்ற பீடையும் இந்து மதத்தவரை அச்சுறுத்தி வருகின்ற தன்மையால் இந்துமதக் கருத்துக்களை சுதந்திரத் தன்மையுடன் மக்கள் மத்தியில் சேர்க்கமுடியாமலிருக்கிறது. எனவே இந்த இருவேறு ஆபத்தான காரணிகளை ம் வெற்றிகரமாக எதிர் கொள்வதற்கு வேண்டிய அறிவும் ஆளுமையும் சுவாமியிடம் வாய்த்திருப்பதற்கு இந்துக்களாகிய நாம் பெருமைப்பட வேண்டும். தற்காலத்தில் சமய வாழ்வினின்று விலகி வாழ்வியலை கட்டமைக்க முற்படும் இன்றைய தலைமுறை யினரைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்கு வேண்டிய அருளுரைகளை, போதனைகளை மேற்கொண்டு சமூகத்தில் ஒழுக்கம்மிக்கவர்களாகவும் இந்து மதத்தின் மீதான பற்றுதலை செலுத்துவதற்கான அறிவியல் பூர்வமான கருத்துக்களை வழங்கி வருகின்றமையானது இந்து மதத்தின்பால் எ லோரையும் ஈர்ப்பதற்கு ஏதுவாகின்றது.

யாழ். மாவட்டத்தை பொறுத்தவரையில் நல்லூர் செட்டித்தெரு வீதியில் யாழ் சின்மயா மிஷனின் தலைமை ஆச்சிரமம் அமைந்துள்ளது. அத்துடன் அளவெட்டி, கோண்டாவில் மற்றும் வன்னி மாவட்டத்திலும் தனது கிளைகளை விஸ்தரித்திருக்கும் இந்நிறுவனம் கிராமத்திலுள்ள வறிய மக்களின் வாழ்வதாரங்களை உயர்த்துகின்ற செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அது மாத்திரமன்றி ஆன்மீக வகுப்புக்கள், சொற்பொழிவுகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் என பாடசாலை மாணவர்களுக்கும் அறநெறி ஆசிரியர்களுக்கும் மக்களுக்கும் என அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் செயற்படுத்தி வருகின்றது. இந்து மதத்திற்கு காலத்திற்கு காலம் ஏற்பட்டு வருகின்ற சவால்கள் எல்லாவற்றையும்கடந்து நம் சமயம் நின்று நிலைக்கின்றது எனில் அதற்கு நம் சமயத்தில் உறைந்து காணப்படுகின்ற அர்த்தம் நிறைந்த தத்துவங்கள்தான். அவற்றை இன்றைய இளம் தலைமுறையினர் பின்பற்றுவதற்கு ஏதுவாக தற்கால அறிவியல் விஞ்ஞானத்திற்கு ஏற்ற வகையில் மக்கள் மத்தியில் பரப்புரை செய்துவரும் சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஆன்மீகப் பணி தொடர வேண்டும் என்பதே எல்லோரதும் வேண்டுதலாகும்.

*எஸ்.நதி*

# பாராளுமன்ற அமர்வுகள் விரைவில் நேரடி ஒலிபரப்பு

பாராளுமன்ற அமர்வுகளை நேரடியாக ஒளி, ஒலிபரப்பு செய்வதற்கான நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படும். இங்கு பேசப்படும் சகல விடயங்களையும் நேரடியாகக் காணவும் கேட்கவும் மக்களுக்கு உரிமையுள்ளது. இதனூடர்க பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்ளும் விதம் குறித்து மக்களும் அறியமுடியுமென சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற ஊடகவியலாளர் சங்கம், சபாநாயகர் அலுவலகத்துடன் இணைந்து நடத்திய பாராளுமன்றத்திற்கும் ஊடகத்திற்குமிடையில் காத்திரமான நட்புறவை ஏற்படுத்துதல் என்ற தொனிப்பொருளிலான செயலமர்வு நேற்று முன்தினம் பாராளுமன்ற முதலாவது குழு அறையில் நடைபெற்றது.

இங்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சபாநாயகர் மேலும் கூறியதாவது, நான் சபாநாயகராக நியமிக்கப்பட்ட நாள் முதல் பாரா ளுமன்ற அமர்வுகளை நேரடியாக ஒலி,ஒளி பரப்பு செய்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வரு கின்றேன். இது தொடர்பில் இந்திய லோக் சபாசபாநாயகருடனும்பேச்சுவார்த்தைநடத்தினேன். அவரது கருத்து மற்றும் வழிகாட்டலுடன் இந்த நடவடிக்கையை எமது பாராளுமன்றத்தில் முன்னெடுக்க கவனம் செலுத்தப் பட்டது.

இந்திய லோக்சபாவுக்கென 24 மணிநேரமும் இயங்கும் தொலைக்காட்சி சேவை இருக்கிறது. இந்திய பாராளுமன்றம் இதற்கான செலவைச் செய்கிறது.

இலங்கையிலும் பாராளுமன்ற அமர்வுகளை நேரடியாக காண்பிக்க முடியும். முதலில் வானொலியூடாக ஒலிபரப்புவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் பேசப்படும் சகல விடயங்களும் மக்களுக்குச் செல்ல வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்ளும் விதம் குறித்தும் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். நிலையியற் கட்டளையின்படி பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகளை கத்தரித்து திருத்தம் செய்து ஊடகங்களுக்கு வழங்காது முழுமையாக வழங்க வேண்டும் என்பதே எனது விருப்பமாக இருந்தது.

சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. சில பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகள் பிரசுரிக்கப்படுவதில்லை. அவர்கள் உரையாற்றியதாக பெயர்கூட எழுதப்படுவதில்லை.

சிலர் தாம் பிரபலமடைவதற்காகவும் தமது கட்சி கொள்கையை பிரபலப்படுத்தவும் நிலையியற் கட்டளைக்கு மாறாக பாராளுமன்றத்தில் உரையாற்றுகின்றனர். சிலவேளை நிலையியற் கட்டளையின் பிரகாரம் அதனை கட்டுப்படுத்த முடியாதுமுள்ளது. சகல பாரா ளுமன்ற உறுப்பினர்களின் உரைகளை நடுநிலையாகவும் நியாயமாகவும் பிரசுரிக்கு மாறு கோரு கிறேன் என்றார்.

இதேவேளை, சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிக்கையில்,

பாராளுமன்ற அமர்வுகளை நேரடியாக காண்பிப்பது குறித்து கட்சித் தலைவர் கூட்டத்தில் பல தடவை ஆராயப்பட்டுள்ளது. பாராளுமன்ற அமர்வுகள் நேரடியாக ஒலி, ஒளிபரப்பு செய்யப்பட வேண்டும். இதனூடாக பாராளுமன்றத்தில் நடப்பவற்றை நிதர்சனமாக மக்களுக்கு காண்பிக்க முடியும்.

ஊடகம் ஒருபக்கமும் அரசியல்வாதிகள் வேறு பக்கமும் இருந்து செயற்பட முடியாது. இருதரப்பினரும் இணைந்து செயற்படுவது ஜனநாயகத்துக்கு முக்கியமானதாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கூறியதாவது, பாராளுமன்ற அமர்வுகள் நேரடியாக மக்களுக்கு காண்பிக்கப்படுவதன் மூலம் தமது மக்கள் பிரதிநிதிகள் குறித்து மக்கள் அறியவும் அவர்களின் நிலைப் பாடுகளைத் தெரிந்து கொள்ளவும் முடியும். வீண் செலவுகள் தொடர்பில் கணக்குக் குழுவுக்கு உரிய அதிகா ரத்தை வழங்கி பாரா ளுமன்ற அமர்வுகளை நேரடியாக காண் பிக்க முன்னுரிமை வழங்க முடியும். மேலும் பாராளுமன்ற உறுப்பிணர்கள் சச்ச ரவுகளை நேரில் பார்க்கும் மக்கள் தமக்கு யார் பொருத்தமான பிரதிநிதி என்பதை தெரிந்து கொள்ளலாம் என்றார். (அ-2)




யாழ்.மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் விழுது ஆற்றல் மேம்பாட்டு நிலைய பால்நிலை சமத்துவ வளவாளர் நவரட்ணம் கிருஷ்ண குமார் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாத்கார காணி அபகரிப்பை ஆதாரத்துடன் நிரூபிக்கத் தயார்

## அமைச்சர் பசிலின் கருத்துக்கு மாவை எம்.பி.சவால்



(யாழ்ப்பாணம்)

**வலிகாமம் வடக்கு மற்றும் வலிகாமம் கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருக்கும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை படைத்தரப்பின் தேவைகளுக்காகச் சுவீகரிக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்த்து இவ்வார இறுதிக்குள் வழக்குகளை தாக்கல் செய்யவுள்ளதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட நாடர்ளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.**

அத்துடன் வடக்கில் இடம்பெறுவது அரசாங்கத்தின் பலாத்கார காணி சுவீகரிப்புத்தான் எனவும் அதை நாம் ஆதாரங்களுடன் நிரூபிப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை வடக்கில் சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு அரசாங்கம் ஒருபோதும் நட்டஈடு வழங்கவில்லை என சுட்டிக்காட்டியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தமது சொந்தக்காணிகளை படைத்தரப்பினர் ஆக்கிரமிப்பதை எதிர்க்கும் தமிழ் மக்கள் ஒருபோதும் அரசாங்கத்தின் நட்டஈடுகளைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள் எனவும் கூறியுள்ளார்.

வடக்கில் ஒரு அங்குல காணியைக்கூட அரசாங்கம் பலாத்காரமாக எடுக்கவில்லை என்றும் நட்டஈடு வழங்காமல் காணிகள் எதனையும் அரசாங்கம் எடுத்திருக்குமாயின் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அதனை நிரூபித்துக்காட்டும் என்றும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்நிலையிலேயே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வலிகாமத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை படைத்தரப்பினரின் தேவைகளுக்காக சுவீகரிக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்த்து இவ்வார இறுதிக்குள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது. இதற்கு ஏதுவாக தமது காணி ஆவணங்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் மக்கள் சமர்ப்பித்துள்ளனர். வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மற்றும் வெளிமாவட்டங்களிலும் வசிக்கும் பெருமளவிலான மக்கள் தமது காணி ஆவணங்களை எம்மிடம் சமர்ப்பித்துள்ளனர்.

உயர்நீதிமன்றத்தில் குறைந்தது 5 ஆயிரம் வழக்குகள் தாக்கல் செய்வதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. இவ்வார இறுதிக்குள் இதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவோம். இந்நிலையில் வடக்கில் ஓர் அங்குலக் காணியைக்கூட தாம் பலாத்காரமாக எடுக்கவில்லையென்று அமைச்சர் பசில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நட்டஈடு வழங்காது காணிகள் எதனையும் அரசாங்கம் எடுத்திருக்குமாயின் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அதை நிரூபித்துக்காட்டட்டும் என்றும் அந்த அமைச்சர் எமக்கு சவால் விடுத்துள்ளார்.

உண்மைக்குப்புறம்பான தகவல்களை வழங்கும் குறித்த அமைச்சருக்கு நான் சில விடயங்களைக்கூற விரும்புகின்றேன். அதாவது வலிகாமத்தில் நடைபெறுவது அரசின் பலாத்கார காணி சுவீகரிப்புத்தான். வலிகாமம் வடக்கு மற்றும் வலிகாமம் கிழக்கு படைத்தரப்பினரின் ஏற்பாட்டில் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் மக்கள் வீடுகள் மற்றும் கட்டடங்களில் ஒட்டப்பட்டுள்ள அறிவித்தலில் அரசாங்கத்தின் அனுமதியுடன் படைத்தரப்பின் தேவைகளுக்காக காணி சுவீகரிக்கப்படுகின்றது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மக்களின் விருப்புக்கு மாறாக காணி சுவீகரித்தால் அதை நாம் பலாத்காரம் என்றுதான் கூறுவோம். அதை நாம் ஆதாரங்களுடன் நிரூபிப்போம். வடக்கில் காணி சுவீகரிப்புக்கு இலங்கை அரசாங்கம் ஒருபோதும் நட்டஈடு வழங்கவில்லை. தமது சொந்தக்காணிகளை இலங்கைப்படைத்தரப்பினர் ஆக்கிரமிப்பதை எதிர்க்கும் தமிழ்மக்கள் ஒருபோதும் அரசின் நட்டஈடுகளை வாங்கமாட்டார்கள்.

எனவே குறித்த அமைச்சர் தனது வாதங்கள்தான் சரியென்றால் உயர்நீதிமன்றத்தில் நாம் காணி அபகரிப்புக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்த பின்னர் அங்குவந்து தனது வாதங்களை முன்வைக்கட்டும் என்று மாவை.சேனாதிராஜா மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## மல்லாவியில் காணாமல் போன மாடு ஆண்டியாகுள கொல்களத்தில் மீட்பு

(மல்லாவி)

மல்லாவி சிவன் ஆலயத்தில் இருந்த பசுமாடு வவுனியா செட்டிகுளம் ஆண்டியா குளத்தில் உள்ள கொல்களத்தில் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவது, பாண்டியன்குளம், துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் வாழ்வாதார உதவித் திட்டத்தின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்ட நல்லின பசுமாடுகள் தொடர்ச்சியாக திருடப்பட்டதை அடுத்து மக்களும் மல்லாவி பொலிஸாரும் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் காரணமாக அண்மையில் சிராட்டிகுளம் பகுதியில் ஒருதொகுதி மாடுகள் மீட்கப்பட்டன.

மிகுதி மாடுகளைத் தேடிச் சென்ற போது மேற்படி கொல்களத்தில் வைத்து அநேக மானோருடைய பசு மாடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இதில் மேற்படி ஆலயத்திற்குரிய மாடும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மல்லாவி பொலிஸார் இது தொடர்பாக தகவல் தருகையில், சிராட்டிகுளம் பகுதியில் மீட்கப்பட்ட மாடுகளிலும் ஆண்டியாகுளம் பகுதியில் மீட்கப்பட்ட மாடுகளிலும் துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேச மக்களின் களவு போன மாடுகள் இருப்பதால் களவு கொடுத்தவர்கள் தம்முடன் தொடர்பு கொண்டு தங்களது மாடுகளை இனங்காட்டி பெற்றுச் செல்லுமாறு அறிவித்துள்ளனர். (அ-3-15)



வடமாகாண ஆளுநரின் நிதியுதவியுடன் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களின் கோரிக்கையின் பேரில் யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்னால் புனரமைக்கப்பட்ட சாரணியத்தின் தந்தை பேடன் பவல் பிரபுவின் உருவச்சிலை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி சாரணிய மாணவர்களுடன் விருந்தினர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர்.கரன், என்.குமார்)

## இலங்கை- இந்திய நல்லுறவை எவராலும் சிதைத்துவிட முடியாது!

### அமைச்சர் பசில் தெரிவிப்பு

பண்டைக்காலம் முதல் இன்றுவரை பலம் பெற்ற நிலையில் உள்ள இலங்கை- இந்திய நல்லுறவை எவராலும் சிதைத்துவிட முடியாதென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இந்திய உதவித்திட்டத்தின் கீழ் 2 பில்லியன் ரூபா செலவில் மீரிகம கொட்டதெனியாவில் புதிதாக அமைக்கப்பட்ட டாபர் இலங்கை பழச்சாறு தொழிற்சாலை திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

இருநாடுகளுக்கும் இடையே உள்ள வர்த்தக தொடர்புகள் முன்னரை விட பலம் வாய்ந்ததாக அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாளொன்றுக்கு 2 இலட்சத்து 80 ஆயிரம் பழச்சாறு போத்தல்களை உற்பத்தி செய்யக் கூடியதாக இந்த தொழிற்சாலையின் முதற்கட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன.

இப்பகுதியில் பழவகை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் அதிக நன்மையடைவர்.

விவசாயிகளின் மரக்கறி உற்பத்திகளைக் கூட இந்தத் தொழிற்சாலைக்கு விற்கக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக அவர்களது பொருளாதார நிலை மேம்படும் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தொழிற்சாலை திறப்பு விழாவில் இலங்கைக்கான முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தா, டாபர் இந்திய நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ஆனந் சிபர்மன் உட்பட இந்திய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (அ-2)

## சர்வதேச குடும்ப சுகாதார தின விழா

சர்வதேச குடும்ப சுகாதார தின விழா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் மாலை அலரிமாளிகையில் நடைபெற்றது.

பாதுகாப்பான தாய்மைக்காக சுதந்திரமான சுகாதார சேவையை அமைப்போம் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த விழாவில், குடும்ப சுகாதார அபிவிருத்திப் பணிக்கு தமது பங்களிப்பை வழங்கிய குடும்ப சுகாதார அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் விசேட விருதுகள் வழங்கப்பட்டன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைபயில் துவாரம் இருந்தால் அதில் பணத்தை நிரப்பிப் பயன் இல்லை.

~ ஜார்ஜ் எலியட்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## ஆசாடபூதிகளை அகற்றி அரசியலைப் புனிதமாக்குவோம்

வடபகுதியின் சமகால நிலைமை எத்தன்மையது என்பதை பொது நோக்குடைய எவரும் புரிந்துகொள்வர்.

எங்கும் எதிலும் அரசியல் என்பது முழுமயமாகிவிட்ட நிலையில், சமூக எழுச்சி ஆயினும் கல்வி உயர்ச்சி ஆயினும், கலாசாரப் பேணுகை ஆயினும் அனைத்தும் அரசியலுக்கூடாகவே நடந்தாக வேண்டியுள்ளது.

எனவே அரசியல் என்பது அழுக்குடையதென்று நோக்காமல் அரசியலை புனிதப்படுத்த வேண்டிய ஒரு கட்டாய தேவை, தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள் அப்படித்தான் இருப்பார்கள் என்பது உண்மையாயினும், அரசியலில் ஈடுபட்டு இன்றும் தெய்வங்களாகப் போற்றப்படும் எத்தனையோ தேசியத் தலைவர்களை நாம் உதாரண புருஷர்களாகத் தரிசிக்கின்றோம்.

எனவே, எங்கள் அரசியலைப் புனிதமாக்க, மக்களாகிய நாம் கடுமையாக முயற்சிக்க வேண்டியுள்ளது.

ஏற்கெனவே சுட்டிக்காட்டியது போல் அரசியலை ஓரம் கட்டிவிட்டு ஓரணுவையேனும் அசைக்க முடியாது என்பது தடுக்கமுடியாத நிலைமையாகிவிட்டது.

இந்த நிதர்சனத்தை நாம் புரிந்து கொண்டால், மக்களின் பணி அரசியலைக் குறைபாடுவதாக அன்றி, அரசியலைப் புனிதப்படுத்துவதாகவே இருத்தல் வேண்டும்.

அவ்வாறாயின் அரசியலில் புனிதம் என்பது எங்ஙனம் ஏற்படவும், ஏற்படுத்தவும் முடியும் என்று நோக்குதல் பொருத்துடையதாகும்.

இதற்கு,

**இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்**

என்ற வள்ளுவனின் வழிகாட்டலைப் பின்பற்ற வேண்டும்.

இங்கு வள்ளுவன் சொல்வதென்ன? பொருத்தமானவனை; மன வளத்திலும், அறிவு வளத்திலும் பலம் உள்ளவனை, திறன் உள்ளவனை, ஆற்றல் படைத்தவனைத் தெரிந்தெடுத்து அவனிடம் பொறுப்பை ஒப்படையுங்கள் என்பதாகும்.

ஆக, தமிழ் மக்கள் இன்று தமக்கென ஒரு சிறந்த அரசியல் தலைமைத்துவம் இன்றி தாங்கொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

நேர்மையும் நீதியும் உண்மையும் தியாகமும் இல்லாத ஆசாடபூதிகளை எங்களின் அரசியல் தலைவர்களாக நாம் கொண்டிருப்பது தான் நாம் படும் துன்பங்களுக்கான மூல காரணம்.

எனவே நேர்மையுள்ள, உள்ளதை உள்ளவாறு எடுத்தியம்பக் கூடிய, ஆற்றல்மிக்க, சீர்மை உள்ளவர்களை அரசியலில் இறக்க வேண்டும். சுயலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு அதற்கு அரசியலைத் துணையாக்கி களமிறங்கியுள்ளவர்களை அரசியலிலிருந்து தூக்கி எறிய வேண்டும்.

இந்தத் துணிவு தமிழ் மக்களிடம் என்று ஏற்படுகிறதோ! அன்றுதான் எங்கள் அரசியல் புனிதமாகும்.

அதன்பின் எல்லாமும் எமக்குச் சாதகமாகும்.

### ஊழியர் நம்பிக்கை நிதியத்தினால்

# உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

2012 கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்தவர்களாக இருப்பவர்களின் பிள்ளைகளுக்கான 12 ஆயிரம் ரூபா பெறுமதியான புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்களை அலுவலக நேரத்தில் யாழ். மாட்டீன் வீதியிலுள்ள ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பிராந்திய அலுவலகத்திப் பெற்றுக் கொள்ளமுடியும் என பொறுப்பதிகாரி ஜெ.தமிழகன் அறிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரி விக்கையில்,

ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்தவர்களாக இருப்பவர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக புலமைப் பரிசில் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் படி 2012 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த ஊழி யர் நம்பிக்கை நிதியத்தில் தற்போது அங்கத்தவர்களாகவுள்ளவர்களின் பிள்ளைகளுக்கு 12 ஆயிரம் ரூபா புலமைப் பரிசிலாக வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் சுமார் 5 ஆயிரம் பேருக்கு புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

இந்தப் புலமைப் பரிசிலுக்கான விண்ணப்பங்களை www.etfb.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசிப் பதன் ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.

இதுதவிர இலக்கம் 70, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய காரியாலய த்திற்கு அலுவலக நேரமான காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்தப் புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள் அடுத்தமாதம் 14 ஆம் திகதிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப் படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# அசாத் சாலியை விடுவிக்கக்கோரி மஹிந்தவுக்கு கடிதம் எழுதியது மு.கா.

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழே கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலியை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தலைமையில் நேற்று முன்தினம் இரவு கூடிய கட்சியின் உயர் பீடக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிபுக்கு அமைய இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ்.ஹமீட் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்த அமைச்சர் ரிஷாத் பதியுதீன் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலி கைது செய்யப்பட்ட விடயம் அறிந்தும் தமது அனைத்து நிகழ்ச்சிகளையும் இரத்து செய்து விட்டு உடனடியாக நாடு திரும்பி கட்சியின் உயர் பீடக் கூட்டத்தை கூட்டி இந்த தீர்மானங்களை எடுத்தார்.

அதேவேளை அசாத் சாலியின் விடுதலை தொடர்பில் ஏனைய முஸ்லிம் கட்சிகள் ஒருமித்துச் செயற்படுவது தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் என்பவற்றுடன் அவசர கலந்துரையாடல் களை மேற்கொள்வதற்கும் இந்த கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது என்றும் ஹமீத் கூறியுள்ளார்.

அத்துடன் அமைச்சர் றிசாத் பதியுதீன், நாடாளுமன்றஉறுப்பினர் ஹுனைஸ் பாருக், கட்சியின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ். ஹமீட், தொழிலதிபர் எஸ். கே.பீ.அலாவுதீன், டாக்டர் ஷாஜகான் ஆகியோர் அசாத் சாலியின் வீட்டுக்கு விஜயம் செய்து தமது அனுதாபத்தைத் தெரிவித்ததுடன் கட்சி எடுத்துள்ள முயற்சிகள் குறித்தும் விளக்கப்படுத்தியுள்ளனர். (அ-2)

# விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையின் குணபாடப் பிரிவினால் நடத்தப்படும் மூலிகைபற்றிய விழிப்புணர்வுக்கருத்தரங்கு இன்றுபுதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யா / மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் பெறும் மூலிகைகள், மூலிகைள் இனங்காணல், மூலிகைப் பயிர்ச்செய்கை, மூலிகைகளின் அறுவடைக் காலம் என்பன தொடர்பாக செயல்முறை அளிக்கப்படவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக சித்தமருத்துத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியகலாநிதி வி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (செ-5)

# பொது இடத்தில் மது; நால்வர் கைதாகினர்

(சுரவெட்டி)

நெல்லியடிப் பொதுச் சந்தையில் வைத்து மது அருந்திய நான்கு நபர்களை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நெல்லியடிப் பொதுச்சந்தையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு சந்தை வியாபாரம் முடிபடைந்த பின்னர் நெல்லியடி நகரப்பகுதியில் தொழில் புரியும் நான்கு நபர்களை சந்தைப்பகுதியில் வைத்து நெல்லியடி பொலிஸார் கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

பொலிஸ் நிலையத்தில் நான்கு நபர்களுக்கு எதிராக வழக்குப் பதிவுகளை மேற்கொண்டதுடன் பிணையில் விடுவித்துள்ளனர்.

நான்கு நபர்களையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பொலிஸாரால் உத்தரவு இடப்பட்டதாக தெரிய வருகின்றது. (செ-3,24)

# வாகன விபத்து ஒருவர் காயம்

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் வாகனம் மோதி குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 8.45 மணியளவில் சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக இடம் பெற்றுள்ளது.

இதில் கொல்லன் கலட்டி மாவிட்டபுரத்தைச் சேர்ந்த ராமநாதன் கணேஸ்வரன் (வயது 47) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

மேலதிக அரசாங்க அதிபரின் வாகனமும் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தரின் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



## இறைவனைக் காண்பது எப்படி?

✦ புதிதாகப் பிறந்த கன்றுக்குட்டி நிற்கக் கற்றுக் கொள்வதற்கு முன்னால் தட்டுத்தடுமாறி பலமுறை கீழே விழுவதுபோல இறையருளைப் பெறுவதில் வெற்றி காண்பதற்கு முன் அநேக தவறுகள் பலமுறை நேரும்.

✦ எறும்பு விடாமுயற்சியுடன் இரை இருக்குமிடத்தை அடைந்து அதைக் கவ்விக்கொண்டு தனது இருப்பிடத்திற்கு கொண்டு சென்று உண்ணுகிறது. அதுபோல பக்தர்களும் இறைவனை விடாமுயற்சியுடன் வணங்கி அவன் அருளைப் பெறவேண்டும்.

✦ பாலில் வெண்ணெய் இருக்கிறது என்று கத்தினால் வெண்ணெய் கிடைக்காது. அதை தயிராக்கிக் கடைய வேண்டும். இறைவா இறைவா என்று சொல்வதால் மட்டும் பலனில்லை. அவனைக் காண விரும்பினால் அதற்கேற்ற முயற்சிகளைச் செய்யவேண்டும்.

✦ மீனைப்பிடிக்க வேண்டுமென்ற ஆவலுடன் தூண்டில்காரன் இரையை விடாமுயற்சியுடனும் பொறுமையுடனும் தண்ணீரைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். அதுபோல பொறுமையுடன் மார்க்கங்களைக் கடைப்பிடிக்கும் ஒருவன் இறைவனைக் காண்பது நிச்சயம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# விஷ்ணு பகவானை கொச்சைப்படுத்திய தோனி மீது வழக்கு

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனியை இந்து கடவுள் விஷ்ணு பகவான் போன்ற தோற்றத்துடன் விளம்பர படத்துக்கு பயன படுத்தி உள்ளனர். இந்த படம் ஒரு வர்த்தக மாத இதழில் வெளியானது. விஷ்ணுவின் கைகளில் பல பொருட்கள் உள்ளன. அதில் சப்பாத்தும் ஒன்றாகும். இந்த விளம்பர அட்டை தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த அட்டையின் மூலம் டோனி இந்துக்களின் மத உணர்வை புண்படுத்தி இருப்பதாக பெங்களூரில் உள்ள நீதிமன்றில் சமூக சேவகர் ஜெயகுமார் ஹிரேமாத் மனு தாக்கல் செய்துள்ளார். இந்திய தண்டனைச் சட்டம் 295 மற்றும் 39 ஆகிய பிரிவுகளின் கீழ் இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஹிரேமாத் தனது மனுவில் கூறியுள்ளதாவது: வணிக மாத இதழின் விளம்பரம் ஒன்றில் விஷ்ணு பகவானாக நடித்த தோனி, தன்னுடைய கைகளில் சப்பாத்து, கைத்தொலைபேசி, எயர்செல், பெப்சி, எஞ்சின் ஒயில் என பல பொருட்களை வைத்திருப்பதுபோல் தோன்றினார். இது இந்துக்களையும் அவர்களின் நம்பிக்கையையும் அவமதிக்கும் வகையிலானது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த புகாரை பதிவு செய்த நீதிமன்றம் விசாரணையை எதிர் வரும் 12ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன், அந்த திகதியில் மனுதாரரின் வாக்குமூலத்தையும் பதிவு செய்ய உத்தரவிட்டார்.

## தோனி அணிக்கு தென்னாபிரிக்க பயணம் எளிதல்ல

– களத்தடுப்பு புயல் ஜொன்டி ரோட்ஸ்



இந்திய அணிக்கு தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடர் எளிதாக இருக்காது என கூறியுள்ளார் முன்னாள் தென்னாபிரிக்க களத்தடுப்பு புயல் ஜொன்டி ரோட்ஸ். தற்போது மும்பை இந்தியன்ஸ் அணியின் களத்தடுப்பு பயிற்சியாளரான ஜொன்டி ரோட்ஸ் இந்திய அணியின் தென்னாபிரிக்க பயணம் குறித்து விபரிக்கையில்,

"தென்னாபிரிக்காவைப் பொறுத்தவரை அவர்கள் உலகின் 'நம்பர் 1' டெஸ்ட் அணி. இந்திய அணி அதன் சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சிறப்பாக விளையாடியிருக்கிறது. ஆனால் வெளிநாட்டுப் பயணம் என்பது வேறுபட்ட சவால். எனவே தென்னாபிரிக்காவை அதன் சொந்த இடத்தில் மடக்குவதற்கு தோனி அணி கடுமையாக உழைக்க வேண்டும். எனவே அவர்களுக்கு தென்னாபிரிக்க பயணம் ஒன்றும் அவ்வளவு எளிதாக இருக்காது" என்றார்.

சச்சினைப் பற்றி கூறும்போது, "அவர் ஒரு ஜாம்பவான். எப்போதும் அணிக்காக நிற்பவர். வயதின் காரணமாக களத்தில் சச்சினின் களத்தடுப்பு வேகம் கொஞ்சம் குறைந்திருக்கிறது. ஆனால் நூறு சதவீத அர்ப்பணிப்புடன் விளையாடுவதன் மூலம் சச்சின் அதை ஈடுகட்டி விடுகிறார் என்றார் ஜொன்டி ரோட்ஸ்.

## அபராதம்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சகல துறை ஆட்ட வீரர் ஷக்கிப் அல் ஹசனுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நடுவரின் தீர்ப்புத் தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ளதுடன் மோசமாக நடந்துகொண்டதாக தெரிவித்து போட்டிக் கட்டணத்தில் 75 வீதத்தை அபராதமாக செலுத்துமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பாபே அணிக்கு எதிரான இரண்டாவது சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின்போது ஷக்கிப் அல் ஹசன் இவ்வாறு நடந்துகொண்டுள்ளார்.

எனினும் இது குறித்து வருத்தம் வெளியிட்டுள்ள ஷக்கிப் அல் ஹசன், குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதேவேளை இப்போட்டியில் குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்து வீசத் தவறியமைக்காக சிம்பாபே அணிக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது

## இன்றைய ஆட்டம்


இரவு 8 மணி

SUNRISERS HYDERABAD Vs CHENNAI SUPER KINGS

பெங்களூர் ரோயல் - பஞ்சாப் அணிகள் மோதிய ஆட்டத்தில் இமாலய இலக்கைத் (191) துரத்தி அடித்து வெற்றிபெற்றது பஞ்சாப் அணி. இந்த வெற்றிக்கு வித்திட்டவர் மில்லர்.

வினய் குமார் ஓவரில் மில்லர் அடித்த பந்தொன்றை கவர்ச்சிகரமாக பிடிக்க முற்பட்ட பெங்களூர் அணித் தலைவர் விராத் கோஹ்லி பந்தைக் கோட்டை விட்டார். இதனால் பந்து கன்னத்தை முத்தமிட்டது. அப்போது 41 ஓட்டங்கள் எடுத்திருந்த மில்லர், கிடைத்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி தொடர்ந்து வந்த பந்துகளை வேட்டையாடி 3 ஆவது விரைவான சதம் அடித்தது மாத்திரமன்றி 2 ஓவர்கள் எஞ்சியிருக்கும் நிலையில் தனது அணிக்கு வெற்றியையும் பெற்றுக்கொடுத்தார்.

## முதுகுவலியால் ஆட்டத்தை இழந்தார் வீனஸ் வில்லியம்ஸ்



மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டத்தில் உலகின் முன்னாள் முதன்நிலை வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா), வைல்டு கார்டு வீராங்கனை அனபெல் மெடினாவை (ஸ்பெயின்) எதிர்த்து விளையாட இருந்தார்.

இந்த நிலையில் முதுகு வலியால் பாதிக்கப்பட்ட 32 வயதான வீனஸ் வில்லியம்ஸ் கடைசி நேரத்தில் இந்த போட்டியில் இருந்து விலகினார்.

வீனஸ் வில்லியம்சுக்கு பதிலாக 56ஆம் நிலை வராங்கனை ஸ்டெபானிக்கு (ஸ்பெயின்) வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.



களத் தடுப்புக்கும் தொப்பி கொடுத்தால் அது எனக்குத்தான்....

## விளையாடாத வீரர்களை மீண்டும் அழைக்கவேண்டும்



இந்தியன் பிறீமியர் லீக் போட்டிகளில் விளையாடாத இலங்கை வீரர்களை நாட்டிற்கு திருப்பியழைக்குமாறு இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுத் தலைவர் சனத் ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடாத வீரர்களை நாட்டுக்கு அழைப்பதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவ[illegible] இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கும், ஐ.பி.எல் நிருவாகத்திற்கும் அறிவித்துள்ளதாக சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மினி உலகக் கிண்ணப் போட்டிகளுக்குச் செல்ல முன்னர் கண்டியில் இங்கிலாந்துடன் முக்கோணத் தொடரில் விளையாடுவதற்கு இலங்கை வீரர்களுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் [illegible]டாக கோரிக்கையை முன்வைத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லியை வீழ்த்தியது ராஜஸ்தான் றோயல்ஸ்



டிராவிட், ரகானே ஆகியோரின் சிறந்த துடுப்பாட்டம் மூலம் டெல்லி அணிக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தான் அணி 9 விக்கெட் வித்தியாசதில் வெற்றிபெற்றது.

ஐ.பி.எல் கிரிக்கெட்டின் நேற்றைய முதல் லீக் போட்டி ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் மாலை 4 மணிக்கு தொடங்கியது இதில் ராஜஸ்தான் றோயல்ஸ்–டில்லிபேர்டெவில்ஸ் அணிகள் மோதின. நாணய சுழற்றியில் வென்ற பேர் டெவில்ஸ் அணி தலைவர் ஜெயவர்த்தன முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

டெல்லி அணியின் தொடக்க வீரர்களாக வீரேந்தர் சேவாக் மற்றும் மஹேல ஜெயவர்த்தனா விளையாடினர் சேவாக் 11 ஓட்டங்களில் பால்க்னர் வீசிய பந்தில் போல்ட் ஆனார் அடுத்து வந்த கௌதம் 2 ஓட்டங்களில் வெளியேறினார்.

பின்னர் களமிறங்கிய டேவிட் வோர்னர். ஜெயவர்த்தனவுடன் ஜோடி சேர்ந்து விளையாடினார். வோர்னர் 13 ஓட்டங்களிலும், ஜெயவர்த்தனா 34 ஓட்டங்களிலும் வெளியேறிய நிலையில் ரோஹேரர் மற்றும் ஜாதவ் ஜோடி சேர்ந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

ரோஹரர் 40 பந்துகளில் 60 ஓட்டங்களும், ஜாதவ் 21 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இறுதியில் டெல்லி அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 154 ஓட்டங்கள் எடுத்தது.

155 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கிய ராகுல் டிராவிட் மற்றும் ரகானே ஜோடி சிறப்பான தொடக்கத்தை கொடுத்து.

சிறப்பாக விளையாடிய டிராவிட் 53 ஓட்டங்கள் எடுத்தபோது, காவுள் வீசியபந்தில்ஆட்டமிழந்தார். ரெஹானேவுடன் ஜோடி சேர்ந்து வாட்சனும் அதிரடியாக விளையாடினார்.

இதனால் ராஜ்தான் ராய்ல்ஸ் அணி ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்து எளிதாக வெற்றிபெற்றது. அந்த அணியில் அதிகபட்சமாக ரெஹானே 63 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்த தோல்வியின் மூலம் டெல்லி அணி ப்ளே ஆப் சுற்றுக்கு செல்லும் வாய்ப்பை இழந்தது. போட்டியில் ஆட்ட நாயகராக ராஜஸ்தான் அணியின் ரகானே தெரிவானார்.

# மும்பை அபார வெற்றி

கொல்கத்தா அணிக்கெதிரான போட்டியில்மும்பை இந்தியன்ஸ்அணி 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றது.

6–வது ஐ.பி.எல்.தொடரின் 53–வது போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நேற்றிரவு 8 மணிக்கு ஆரம்பமானது. இதில் உள்ளூர் அணியான மும்பை இந்தியன்ஸ் அணி, கொல்கத்தா ‘நைட் ரைடர்ஸ் அணியைச் சந்தித்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

இதன்படி தொடக்க வீரர்களாக களமிறங்கிய சச்சின் டெண்டுல்கரும் டுவைன் ஸ்மித்தும் மும்பை அணியின் இன்னிங்ஸை மெய்டனுடன் ஆரம்பித்தார்கள்.

இதன் பின்னர் பந்துவீசிய ரியான் மக்லரனின் ஓவரில் டெண்டுல்கர் தொடர்ச்சியாக 5 பவுண்டரிகள் அடித்து, ரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்.

அதேசமயம் மறுமுனையில் துடுப்பாடிக் கொண்டிருந்த டுவைன் ஸ்மித்திடம் தடுமாற்றம் காணப்பட்டது. இதற்கு வேகப் பந்துவீச்சாளர் பாலாஜியின் பந்து வீச்சு நெருக்கடியைக் கொடுத்தது.

இந்த ஜோடி நீண்டநேரம் நிலைத்து நின்றாலும் சரவெடியான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியவில்லை. அணி 13 ஓவர்களில் 93 ஓட்ங்கள் எடுத்த நிலையில் முதலாவது விக்கெட் சரிக்கப்பட்டது.

டெண்டுல்கர் 28 பந்துகளில் 8 பவுண்டரிகள் அடங்கலாக 48 ஓட்டங்களைக் எடுத்து ஆட்டமிழந்தார்.

டெண்டுல்கரின் ஆட்டமிழப்பு நிகழ்ந்து ஒரு சில நிமிடங்களில் டுவைன் ஸ்மித்தும் 53 பந்துகளில் 7 பவுண்டரிகள் அடங்கலாக 47 ஓட்ங்களுடன் பெவிலியனை நோக்கி நடையைக் கட்டினார். இவர்களின் வெளியேற்றம் மும்பை அணியின் ஓட்ட வீதத்தில் சரிவை ஏற்படுத்தியது.

எனினும் கடைசிக் கட்டத்தில் தினேஸ் கார்த்திக் காட்டிய அதிரடி ஜாலத்தினால் மும்பை அணி சவாலான ஓட்ட எண்ணிக்கையை எட்டிப்பிடித்தது.



20 ஓவர்களில் முடிவில் மும்பை இந்தியன்ஸ் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களை எடுத்தது.

அதிரடி காட்டிய தினேஸ் கார்த்திக் 18 பந்துகளில் 3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 34 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பில் ஓட்டங்களை வாரி வழங்கிய ரியன் மக்லரன் 60 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

171 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு ஆரம்பமே சறுக்கலாக அமைந்தது.

அணித்தலைவர் காம்பீரை ஆட்டத்தின் 4 பந்தில் இழந்த அவ்வணி, தொடர்ந்து வந்த வீரர்களையும் அடுத்தடுத்து இழந்து தடுமாற்றத்தைச் சந்தித்தது.

இறுதியில் தட்டுத்தடுமாறி 18.2 ஓவர்கள் வரை தாக்குப்பிடித்த அவ்வணியால் 105 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் கொல்கத்தா அணி சார்பாக கலிஸ் 24, தாஸ் 23 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாகப் பெற்றுக் கொடுத்தனர்.

மும்பை அணியின் பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 3 விக்கெட்டுக் களையும், ஜோன்சன், ஓஜா ஆகி யோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக மும்பை இந்தியன்ஸ் அணியின் சச்சின் டெண்டுல்கர் தெரிவு செய்யப்பட்டார்.

# மாவட்ட மட்ட கூடைப்பந்து யாழ்.இந்து சம்பியன்



யாழ் இந்து–யாழ்.மத்திய கல்லூரிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் தயாகரன், கபிலன் அதிரடியில் யாழ். இந்து அணி 28 புள்ளிகளால் யாழ். மத்திய கல்லூரியை இலகு வெற்றி கொண்டு மாவட்ட சாம்பியன் ஆனது.

யாழ் மாவட்ட அணிகள் பங்குபெறும் 2013ஆம் ஆண்டுக்கான யாழ். மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்று வருகிறது.

இதில் யாழ். இந்துவில் நேற்றைய தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் அனுசன் தலைமையிலான யாழ். இந்துக் கல்லூரி அணி யாழ் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து ஆடியது.

இப் போட்டியின் தொடக்கத்திலிருந்தே யாழ். இந்து வீரர்களின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தது முதல் பாதி ஆட்டத்தில் யாழ் இந்து வீரர்கள் 20:14 என்ற கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதி ஆட்டத்திலும் யாழ். இந்து வீரர்கள் 20 புள்ளிகளை பெற்றுக் கொள்ள முடிந்த போதும் யாழ் மத்திய வீரர்கள் 16 புள்ளிகள் பெற்றுக் கொண்டனர் ஆனாலும் 40:30 என்ற மொத்த புள்ளிகள் அடிப்படையில் யாழ் இந்து முன்னிலை வகித்தது.

மூன்றாவது பாதியில் இரு அணி வீரர்களும் ஒருவருக்கொருவர் சளைத்தவர் இல்லை என மிகச் சாதுரியமாக மோதிக் கொண்டனர் ஆனாலும் யாழ். மத்தி வீரர்கள் 16 புள்ளிகளையும் யாழ் இந்துவீரர்கள் 17 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர் மூன்றாவது பாதி 46:57 என்ற புள்ளிகளுடன் முடிபுக்கு வந்தது.

கடைசி பாதி ஆட்டத்தில் யாழ் இந்துவீரர்கள் திறமையான விளையாட்டினால் புள்ளிகளை வேகமாக உயர்த்தி 27 புள்ளிகளை பெற்றுக் கொண்டனர் அதே வேளை யாழ். மத்திய மத்திய வீரர்களால் 13 புள்ளிகளை மட்டும் பெற முடிந்தது. ஆட்டம் 56:84 என்ற கணக்கில் யாழ். இந்துவசமானது. (3-23)

# வேட்பாளர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

செப்ரெம்பர் மாதம் நடைபெற்றவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.க. சார்பில் யாழில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவர் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் யாழ். சிவன் வடக்கு வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் சுப்பிரமணியம் (வயது 50) என்ற வர்த்தகரே படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது தனது தொழில் முடித்து நேற்று முன் தினம் தனது வீட்டிற்கு இரவு 9.45 மணியளவில் குறித்தவர்த்தகர் வீடு திரும்பியுள்ளார். வீட்டிற்கு முன் மறைந்திருந்த மூவர் வர்த்தகரை வீட்டிற்கு செல்ல விடாது தடுத்து நிறுத்தி அவர் மீது கொட்டன் தாக்குதலை மேற்கொண்டுள் ளனர். இதில் இடது கையிலும் நெஞ்சுப்பகுதியிலும பலத்த அடிகாயம் ஏற்பட்டுள்ளது. உடனடியாக சத்தம் கேட்டு அயலவர்கள் விரைய இனந்தெரியாத தாக்குதல் கும்பல் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளது.

படுகாயமடைந்த மேற்படி நபருக்கு யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் குறித்து சுப்பிரமணியம் யாழ். பொலிசாரிடம் முறையிடுகையில் நான் ஐ.தே.க சார்பில் போட்டியிடக் கூடாது என தெரிவித்தே என்னை தாக்கினர் என குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ். பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி!

(மிருசுவில்)

மின்சாரம் தாக்கியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று 3 மணியளவில் மல்லாகம் கல்லாறுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மரங்களை வெட்டிக் கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் மேற்படி விபரீதம் இடம்பெற்றுள்ளது.

இதில் விசுவமடு காளிபுரம் பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை செந்தூரன் (வயது-19) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

படுகாயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றிரவு 7.15 மணியளவில் உயிரிழந்துள்ளார். (இது தொடர்பில் முன்னர் கிடைத்த செய்தி உள்ளே) (செ-83)

## கூட்டமைப்பை தொடர்ந்து பிளவு...

படும் கூட்டமைப்பைப் பதிவு செய்வது என்பது ஒரு பிரச்சினையல்ல. தலைவர் சம்பந்தன் நினைத்தால் இதனை ஒரு மணி நேரத்துக்குள் செய்துவிட முடியும் எனவும் சுட்டிக் காட்டியிருக் கின்றார்.

இது தொடர்பில் சிவசக்தி ஆனந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கூட்டமைப்பைப் பதிவதால் தமது கட்சியும் கொடியும் பறிபோய்விடும் என்று தமிழரசுக் கட்சியின் தலைமை அஞ்ச வேண்டியதில்லை. மேலும், கூட்டமைப்பை பதிவு செய்வதென்ற தேவை தேர்தல் காலங்களில் தோன்றியதல்ல. தொடக்கக் காலத்திலிருந்தே பதிவு முயற்சிகள் பற்றிப் பேசப்பட்டும் அதன் உறுப்புக் கட்சிகளால் ஒத்துக் கொள்ளப்பட்டும் வந்தவையே.

அத்துடன், தேர்தல் காலக் கூட்டுக் காக கூட்டமைப்பு உருவாகியிருக்கவில்லை. எமது மக்களின் நிரந்தர அரசியல் தீர்வு நோக்கியே உறுப்புக் கட்சிகள் ஐக்கியப்பட்டன. இதன் உருவாக்கத்தின் பின்னால் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள், போராளிகளின் உயிரிழப்புக்கள் மட்டுமன்றி அங்கம் இழந்தவர்கள், உளப்பாதிப்படைந்தோர், சொத்துக்களைப் பறிகொடுத்தோர் அனைவரும் அத்திபாரமாக உள்ளனர்.

இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்வதாக சம்பந்தன் ஐயா அவர்களே கூறியிருக்கின்றார். சம்பந்தன் ஐயா விரும்பினால் கூட்டமைப்பைப் பதிவு செய்து ஒரு பலமான அமைப்பாக அதனைக் கட்டியமைக்க முடியும். அதன்மூலமாக மட்டுமே கூட்டமைப்பின் ஒற்றுமையைப் பாதுகாக்க முடியும். அவரால் ஒரு மணி நேரத்துக்குள் இதற்கான தீர்மானத்தையும், திட்டங்களையும் வகுத்துக்கொள்ள முடியும் ஆனால் அவ்வாறு செய்யாமல் கூட்டமைப்பைப் பிளவுபடுத்துவது என்ற அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் அவர் விழுந்துவிடக் கூடாது என்பதே எமது விருப்பமாகும்.

கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகள் ஆயுதப் போராட்டத்தின் மூலமாக உருவாகியவை. அவற்றுடன் எவ்வாறு இணைந்து செயற்பட முடியும் என தமிழரசுக் கட்சியினர் கருதினால் அது தவறானது. இலங்கை - இந்திய உடன்படிக்கையின் மூலம் போராளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது என்பது அவர்களுக்குத் தெரியாததல்ல. அதனால் அதில் சட்டப் பிரச்சினைகள் எதுவும் இல்லை. அத்துடன் எமது அமைப்புக்களை கடந்த இரண்டு தசாப்த காலமாக அரசியல் கட்சிகளாக பதிவு செய்து தேர்தல்களிலும் நாம் போட்டியிட்டிருந்தோம். மக்களுடைய ஆதரவையும் நாம் பெற்றிருந்தோம் என்பதை தமிழரசுக் கட்சியினரால் மறுக்கமுடியாது. அதனால், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட கட்சிகளுடன் இணைந்து செயற்பட முடியாது எனக் கூறுவது ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமாகத் தெரியவில்லை.

ஆக, தமிழ் மக்களுடைய விருப்பப்படி ஒரு பலம்வாய்ந்த அமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்டியெழுப்புவதற்கு தமிழரசுக் கட்சியினர் எதற்காக முன் வருகின்றார்கள் இல்லை என்பது புரியாத புதிராகவே உள்ளது. அதற்காக அவர்கள் சொல்லும் காரணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளத்தக்கவையாக இல்லை. கட்சி அரசியலைக் கைவிட்டு பொது நலன்களின் அடிப்படையில் செயற்பட வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு நிலை உருவானபோது தந்தை செல்வா தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளை இடைநிறுத்திவிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார். கட்சி அரசியலைக் கைவிட்டு கூட்டணியைப் பலப்படுத்தவே அதன்பின்னர் அவர் உழைத்தார். எம் அனைவருக்கும் அவரது தீர்க்கதரிசனம் ஒரு முன்னுதாரணம்.

ஈழத் தமிழர் வரலாற்றில் முக்கியமான ஒரு திருப்பு முனையில் உள்ள இன்றைய கால கட்டத்தில் தந்தை செல்வா அன்று எடுத்ததைப் போல தீர்க்க தரிசனமாக தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டியவராக சம்பந்தன் ஐயா அவர்கள் உள்ளார்.

ஈழத் தமிழர்களுடைய வரலாற்றில் முக்கியமான கட்டத்தில் மிக முக்கியமான தீர்மானத்தை எடுக்க வேண்டிய நேரமிது. அவலமான வாழ்வை நடத்திக் கொண்டிருக்கும் தமிழர்கள் அவரது முடிவைத்தான் எதிர்பார்த்துள்ளார்கள்.

இவ்வாறு சிவசக்தி ஆனந்தன் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார். (செ-11)

## மகாராணி வரார்!...

இம்மாநாட்டில் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் பங்கேற்பார் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் பிரித்தானிய மகாராணியும் இம்மகாநாட்டில் பங்கேற்பார் என இலங்கை அரசாங்கம் நம்பியிருந்தது.

இந்நிலையில் பக்கிங்ஹாம் மாளிகையின் இந்த அறிவிப்பு அரசாங்கத்துக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது அத்துடன் இது அரசாங்கத்துக்கு பெரும் பின்னடைவாகவும் கருதப்படுகின்றது.

அதேவேளை எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் பிரித்தானிய மகாராணிக்குப் பதிலாக இளவரசர் சாள்ஸ் கலந்து கொள்வார் எனவும் பக்கிங்ஹாம் மாளிகையின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய மகாராணியின் வயது காரணமாக அவரால் நீண்டதூர பயணங்களை மேற்கொள்ள முடியவில்லை என பக்கிங்ஹாம் மாளிகையின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

1973 ஆம் ஆண்டு முதல் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மகாநாட்டில் கலந்து கொண்டு வரும் பிரித்தானிய மகாராணி அவ்வமைப்பின் அரசியல் தலைவர்களின் உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ளாமல் விடுவது இதுவே முதற் தடவையாகும்.

பிரித்தானிய மகாராணி அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கையில் பொதுநலவாய நாடுகளின் நல்லாட்சி மனிதவுரிமைகளுக்கு மதிப்பளித்தல் கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் சட்டத்தின் ஆட்சி போன்றவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத் தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மனிதவுரிமை மீறல்களைக் கவனத்தில் கொண்டு இம்மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் பிரித்தானிய மகாராணி முடிபு எடுக்க வேண்டும் என மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இலங்கையில் இம் மாநாட்டை நடத்துவதற்கு முன் அங்கு இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என கனடா வலியுறுத்தியுள்ளது ஆனால் இதனைக் காரணமாகக் காட்டி மாநாட்டை புறக்கணிக்க முடியாது என அவுஸ்திரேலியா தெரிவித்திருந்தது.

அதேவேளை இம்மாநாட்டில் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் பங்கேற்பார் என அவரின் செயலகம் அறிவித்திருந்தது.

இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு இந்த மாநாட்டை தாம் புறக்கணிப்பதாக சர்வதேச மனித வுரிமை அமைப்புக்கள் குறிப்பிட்டிருந்தன.

இலங்கையில் மகிந்தராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தொடர்ந்து மனிதவுரிமை விடயத்தில் கட்டுப்பாட்டை இழந்து வரும் நிலையில் அங்கு இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் பங்கேற்பது இலங்கை அரசாங் கத்தின் மனிதவுரிமை மீறல்களை ஏற்றுக் கொண்ட தாகிவிடும் என இவ்வமைப்புக்கள் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஆறு இராணுவ...

யில் மற்றுமொரு இராணுவ வீரர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் பதுங்கு குழிகளை இராணுவத்தினர் துப்புரவு செய்து கொண்டிருந்தபோதே இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (செ-6)

## அசாத் சாலியின்...

களும் இதற்காக குரல் கொடுக்க வில்லை. இந் நிலையில் அமைச்சர் ஹக்கீம் பதவிவிலக வேண்டும். அசாத் சாலிக்கு எதிராக நிதி மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தால் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் ஏன் அவரைக் கைது செய்ய வேண்டும்.

அசாத் சாலியின் கைது குறித்து ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டித்துள்ளது. இது ஒரு பழி வாங்கும் செயற்பாடாகவே கருதப்படுகின்றது.

ராஜீவ் காந்தி கொலை சந்தேக நபர் மற்றும் சர்வதேச பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபரான கே.பி. அரசின் பாதுகாப்பிலும் கருணா அம்மான், தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் அரசின் பாதுகாப்புடன் உள்ளனர். தீவிரவாதிகளுக்கு அரசு பாதுகாப்பு அளித்து தன்னுடன் வைத்துள்ளது.

அதேவேளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவரை பார்ப்பதற்கு கூட குடும்ப உறுப்பினர்களுக்கு அனுமதியளிக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## மர்மமாய் உயிரி...

துள்ளது என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த யாழ்.நீதவான் பெ.சிவகுமார் சடலத்தினை பார்வையிட்டதோடு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தர விட்டார்.

சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு உள்ளதோடு இவ் உயிரிழப்பு தொடர்பான விசாரனையினை திடீர் மரண விசாரனை அதிகாரி பிரேம்குமார் மேற்கொண்டுள்ளார். (செ-4,6)

## பயங்கரவாத...

கள் தொடர்பில் முஸ்லிம் அமைச்சர்கள் அமைதியாக இருந்த தருணத்திலே அசாத் சாலி முஸ்லிம்களுக்காக குரல்கொடுத்தாரென்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்கிழமை 23 கீழ் இரண்டில் விசேட உரையாடலென்றை ஆற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார். (செ-11)


**வீடு வாடகைக்கு உண்டு**

நாவலர் வீதி, அன்னசத்திர லேனில் சகல வசதிகளுடன் கூடிய (7 அறைகள், குளிரூட்டப்பட்ட, பாதுகாப்பு கமராக்களுடன், வாகனத் தரிப்பிடம்) வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

077 047 6299, 077 228 7211 (2559)

**அரியாலையில் வீடு விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் அரியாலை தபால் கட்டைச் சந்திக்கும் (A9 றோட்) செம்மணி வீதிக்கும் இடைப்பட்ட 225/1 ஆனந்தன் வடலி வீதியில் 2 1/2 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:

த.சிவபாலன்
225, ஏ.வி.றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம். 0779787941 (இ)

ஆண்கள், பெண்களுக்கான

**கையடக்க தொலைபேசி வகுப்புக்கள் ஆரம்பம்**

தொடர்புகளுக்கு:

0776031917 (2556)

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் லேடன் புடைவை நிலையத்திற்கு...

- ✔ ஆண் – 1 (வயது 30-45)
- ✔ பெண் – 2

அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் உடன் நேரில் வரவும்.

**லேடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (c-3252)

FALC **FRENH LANGUAGE CENTRE**

யாழில் சர்வதேச தரத்தில் French வகுப்புக்கள்....

**FRENCH CLASSES**

France, Canada, Belgium செல்லவுள்ள எவரும் இலகுவாக French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்..

ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல், பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

இது வரைக்கும் 700 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்... இவ் வருடத்தின் 6 வது பிரிவு விரைவில்.. 10 பேர் மட்டுமே ஒரு வகுப்பிற்கு.

No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital முன்பாக).

No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)

0779 789 456

English, Deutsch, Italian & Sinhala Classes.

**கனடா ▶ கையில் உள்ள காசே போதும்**

A/L சித்தியுடன் - மிகக் குறைந்த ஆலோசனைக் கட்டணத்துடன் கனடாவில் படிக்க , உழைக்க அரிய வாய்ப்பு

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090 (சி-3261)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வல்ம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.